விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (16.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சிக்கித் தவிக்கிறது மு.கா;

# திரிசங்கு நிலையில் ஹக்கீம்!

## கட்சிக்குள் கருத்து மோதலா?



(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை கிழக்குமாகாண சபையில் எத்தரப்புக்கு வழங்குவது என்பது தொடர்பில் கட்சி உறுப்பினர்களுக்கிடையே கூட்டப்பட்ட நேற்றைய கூட்டத்திலும் இணக்கமான முடிபு எதனையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையினால் பெறமுடியவில்லை. (19ஆம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணை மண்கும்பான் கடற்கரையில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் கரையொதுங்கியுள்ளது.

இச்சடலம் முற்றிலும் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

## ஐ.நா.அதிகாரிகள் -பசில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரதிநிதிகள் குழுவினருக்கு இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கம் அளித்துள்ளார்.

ஐக்கிய மனித உரிமைப் பேரவையின் ஆசிய பசுபிக், (19ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேசிய அரசாங்கம்? மகிந்த அழைத்தால் பேசலாம்!



### சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தால், தாம் அவருடன் பேசத்தயார் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது தமிழ்த்தேசியக் கூட் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அதிகாரிகள் மூவர் நாளை யாழ்.விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை விரைவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அதற்கான ஏற்பாடுகளை கவனிக்கும் வகையிலேயே இவர்களது விஜயம் அமைந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகத்தில் ஆசிய பசிபிக், மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்கா ஆகிய பிராந்தியங்களை கவனிக்கும் பிரிவுக்குத் தலைவரான ஹெனீ மெகாலி தலைமையில் விஜயம் செய்துள்ள இக்குழுவினர் ஒருவாரகாலம் இலங்கையில் தங்கியிருப்பார்கள். இந்தக் குழுவினர் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## போனஸ் ஆசனத்தில் ஒன்று தமிழர் ஒருவருக்கு கிடைத்துள்ளது

(மட்டக்களப்பு)

கடந்த வாரம் கிழக்கு மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தலில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இரு போனஸ் ஆசனங்கள் உட்பட 15 ஆசனங்கள் கிடைத்தன. அந்த இரு போனஸ் ஆசன உறுப்பினர்களாக தமிழர் ஒருவரும் சிங்களவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக கிழக்கு மாகாண சபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் 13ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 11 உறுப்பினர்களும், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ஒருவருமாக 12 தமிழ் உறுப்பினர்கள் தெரிவாகினர்.

அத்துடன், 15 முஸ்லிம்களும் 8 சிங்களவர்களும் தேர்தல் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஐ.நா.அமர்வில் அறிக்கை சமர்ப்பிப்பு

(ஜெனீவா)

ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையின் 21ஆவது கூட்டத்தொடரில் பிரான்ஸை தளமாகக் கொண்டு செயற்படும் தமிழர் மனிதவுரிமை மையத்தினால் (TCHR) இலங்கைத் தமிழ் மக்கள் பற்றிய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. கூட்டத் தொடரின் தலைவி லோற டுபியூ லாசிறி, மனிதவுரிமை ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை நிபுணர்கள், அங்கத்துவ நாடுகளின் ராஜதந்திரிகள், அரச சார்பற்ற பிரதிநிதிகள் மற்றும் 21ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றும் சகலருக்கும் இவ்வறிக்கை விநியோகிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மனுவில், இலங்கை (19ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்
SAFARI
72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்
GALAXY 100
100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்
CAMY 80
80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்
SUPER CUP
4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி
தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்
சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Saravana Tex
இன்று முதல் எமது புதிய பிரமாண்டமான காட்சியறை
16.09.2012 ஞாயிற்றுக்கிழமை சங்கானையில்
நீங்களும் இளைய தலைமுறையின் தனித்துவமான வடிவங்களை ரசித்துக்கொள்ள எமது பயணத்தில் இணைந்து கொள்ளுங்கள்
திறப்பு விழாவில் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும்கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
சரவணா ரெக்ஸ் 04
இல.219, பிரதான வீதி, சங்கானை. (HNB வங்கி முன்பாக)
தொ.பேசி: 021 225 0909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

(C-941)

## மழை வேண்டி பாராயணம் செய்யும் திருப்பதிகம் கைவசம் உண்டு.

கா.கு. சிவபாலன்
388, ஆ. வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1066)

## வேலையாட்கள் தேவை

ஐப்பசி மாதம் புதிதாக திறக்கப் படவுள்ள எமது கிளை நிறுவனத் துக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண்-பெண் இரு பாலாரும்) பழக விரும்புகிறவர்களுக்கு அடிப் படைச் சம்பளம் 8000/- தகைமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும் நேரில் வரவும்.

நல்லி சில்க்ஸ்
121, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1052)

## வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு

(கரவெட்டி)

ஊர்காவற்துறை நகரப் பகுதியில் தேவாலயத்திற்கு அருகில் உள்ள பாழடைந்த வீட்டில் வெடிபொருட்கள் இருப்பது நேற்று இரவு 7 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டைத் துப்புரவு செய்த நபர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே ஊர்காவற்துறைப் பொலிஸார் இவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

எனினும் அவ்வெடிபொருட்களின் எண்ணிக்கை விபரங்கள் நேற்று வரை வெளியிடப்படவில்லை. (ந-24)

## வேலையாட்கள் தேவை

எமது ஆடை விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண் - பெண் இருபாலாரும்) பழக விரும்புகிறவர்களும் தொடர்பு கொள்ளலாம். தகைமைக் கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

காவேரி சில்க்ஸ்
48, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2333

(C-1067)

## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

புதிய வகுப்புகள் : சனி 15.09.2012

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

(392)

## வெடிபொருட்களுடன் இளைஞர்கள் கைது !

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதி கடற்பரப்பில் வெடிபொருட்களுடன் 3 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்களிடம் 650 கிராம் ரி.என்.டி வெடிபொருட்கள், டெட்னேற்றர்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது எனவும் தற்போது சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-4)

## ஒரே ENGLISH COURSE மூன்று தகைமைகள்

1. Spoken English / Certificate / Dip in English
   (Speaking, Reading, Listening and writing)
2. Personality Development
3. Leadership Training

எதிர்கால சவால்களை வெல்லக்கூடிய விதத்தில் ஆங்கிலப் பாடநெறிகள் தயாரிக்கபட்டுள்ளதால் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் தலைமை தாங்கும் இயல்பும் வளர்கின்றது.

இவ் ஆங்கிலப் பாடநெறிமுழுமையான ஆங்கில சூழலில் ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு நிகரான அனுபவமிக்க ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது. மாணவர்கள் ஆங்கிலத்தை பயிலுவது மேலும் இலகுவாகின்றது.

**சர்வதேச ஆங்கிலத் தகைமைகளான**

**IELTS, TOEFL, City & Guilds, Etc...**

VISA SERVICE / STUDY ABROAD

(ஆங்கிலப் பாடநெறியில் கலந்துகொள்ளும் சகமாணவர்களுக்கும் சிங்களம் மற்றும் அடிப்படை கணனிப் பாட நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும்.)

**IISEEES NALLUR CAMPUS**

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225

(C-1069)

## உடனடி வேலைவாய்ப்பு
## கட்டார் நாட்டில் விமான நிலையத்தில்

**Taxi Driver No:- 4**

வட மாகாணத்தில் தலைசிறந்த சாரதிகளாக பணிபுரியும் உங்களுக்காகவே இதோ.....

கட்டார் நாட்டில் அதிக சம்பளத்துடன் விமான நிலையத்தில் Taxi Driver ஆக பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்

அதிஉயர் சம்பளம் + OT (சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்)

இரண்டே வாரத்தில் பயணம். மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள்

LANKA VOICE VAVUNIYA
0750650084

(432)

## மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு

சவுதி, கட்டார், ஓமான், டுபாய் போன்ற நாடுகளில் உள்ள செல்வந்த வீடுகளில் வேலை வாய்ப்பு மிகக் குறுகிய காலத்தில் முற்றிலும் இலவசமாக பயணமாகலாம்.

**விரையுங்கள்....**

LANKA VOICE....

தொடர்புகளுக்கு:-
077-147-24-84, 071-288-65-25

(434)

## வான் விற்பனைக்கு

வாகன இல. 58-xxxx, Lo வீல், 2AC, 4 கதவு, வென்ஸ் மொடெல்.

தொடர்புகளுக்கு:
0771176689

(433)

## Congratulations !!! எமது முதற் பிரிவு மாணவர்களை வாழ்த்துகின்றோம் !!!

எமது நிறுவனத்தில் உயர் தேசிய மருந்தாளர் கற்கை (Pharmacist) நெறியை நிறைவு செய்து Nottingham College of London சான்றிதழ் பெறும் எமது மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் !!!



### Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)



T.Krishny (Kondavil)



Y.Rammia (Pandateruppu)



C.Sinthuja (Kokuvil)



R.Tharsika (Thirunelvely) (South)



M.Inthuja (Kokuvil) (West)

After A/L Exam → HND in Pharmacy (16 Months) → SLMC Certificate → B.Pham (UK,Canada,Aus) (Universities)



Graduation is an exciting time to think about possibilities and look for opportunities. We hope you are able to find both. Congratulations UNI Chairman,Staff !!

Mr.J.C. Lloyd,
Principal,The City College, UK



2006ம் ஆண்டு போர்க்கால சூழ்நிலையில் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனமானது இன்று வரை ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கணனிக் கல்வி கற்பித்து சான்றிதழ்களை வழங்கிவரும் நிறுவனமாக திகழ்கின்றது. மேலும் 2009ம் ஆண்டு யாழில் ஆரம்பிக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் முதல் முறையாக இவ் உயர்தேசியமருந்தாளர் கற்கைநெறியை ஆரம்பித்து இன்று எமது மாணவர்கள் இக் கற்கைநெறியை நிறைவுசெய்து சான்றிதழ் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். வாழ்த்துகின்றேன்!!!!

செ.செல்வதாஷன், இயக்குனர் யு.என்.ஐ, யாழ்ப்பாணம்,மானிப்பாய்.

### Greeting Messages From Our International University Partners



It is a success, you truly deserved, a great achievement you have really achieved. Congratulations.

Sincerely

Drs. Chris J.M. van den Borne,
Director International Office Saxion University of Applied Sciences, The Netherlands.



Graduation is a time to celebrate your achievements, prepare for a future of opportunities and embrace a world of infinite possibilities.

P.Karan,Chairman/MD Nottingham College of London,



Congratulations Graduate, you did it! You are going to begin a new life after graduation. We pray to God that it will be a life full of happiness.

(http://www.eieonline.com)

Antonello Cappitta,
President, European Institute of Education,Malta.

புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில் இணையவிரும்பும் மாணவர்கள் 21/09/2012ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும். மேலும் அனைத்து கணினிக் கற்கைநெறிகளும் ஆரம்பமாக உள்ளது.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்

UNI - ICT Campus No - 83,Palaly Road, Kantharmadam,Jaffna. (பிசா உணவகம் அருகில் உள்ள லேனில் உள்ளது)

Telephone :- 021 321 6433 / 0777 110 862 (எமது கிளை நிறுவனம் - மானிப்பாய் பிரதேச சபை முன்பாக மானிப்பாய்)

(C-1065)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்பு கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் அறிவித்துள்ளார். (அ)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான விருதுகள்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான விருதில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்து சிறந்த இளையோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் சாவகச்சேரி பிரதேசத்தில் ச.மதியுகன், உடுவில் பிரதேசத்தில் இ.யுவராஜ், நல்லூர் பிரதேசத்தில் இ.ரவீந்திரன், கரவெட்டி பிரதேசத்தில் ந.கஜேந்திரன், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் அ.ஜெபநேசன், கோப்பாய் பிரதேசத்தில் அ.திவாகர், சங்கானை பிரதேசத்தில் க.அயூரி தெல்லிப்பளை பிரதேசத்தில் ச.லக்சன், யாழ்ப்பாண பிரதேசத்தில் க.மக்ஸ்மில், நெடுந்தீவு பிரதேசத்தில் ஞா.அமலராஜன், மருதங்கேணி பிரதேசத்தில் ற.பிரதீபா, ஊர்காவற்றுறை பிரதேசத்தில் யூ.விஜிதா, காரைநகர் பிரதேசத்தில் க.வினோதி, வேலணை பிரதேசத்தில் ஆர்.சர்மா, பருத்தித்துறை பிரதேசத்தில் ச.அருண்யா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சிறந்த இளைஞர் கழக பிரதேச சம்மேளனங்களாக சண்டிலிப்பாய், சாவகச்சேரி, கோப்பாய் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் சிறந்த இளைஞர் கழகங்களாக சுதுமலை வடக்கு, பாசையூர் புனித அந்தோனியார், சாவகச்சேரி மறவன், வாதரவத்தை தமிழ் நிலா ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டுக்கான மாவட்ட சம்மேளனத்தின் சிறந்த தலைவராக ச.நவதர்சன் மற்றும் 2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த தொண்டர் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செ.உதயமோகன், கரவெட்டி பிரதேச சபை வ.மனோராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-37)

# வடமராட்சி தெ/மே.பி.சபைக்கு தீயணைப்பு வாகனம் தேவை

## கோரிக்கை விடுத்தும் பயனில்லை

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்திற்கு தனியான தீயணைப்பு படை பெற்றுத்தருமாறு பலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் சில மாதங்களுக்கு முன் கடையொன்று தீப்பற்றிய போது இதனால் அவ்வர்த்தகருக்கு பல் இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டது.

இதனையடுத்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் வடமராட்சிக்கென தனியான தீயணைப்புப் படை ஒன்று தேவை என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் இத்தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கைக்காக யாழ்.அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

ஆயினும் அதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொள்ளவில்லை எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். (அ-3-24)

# குழந்தையை விற்ற தாயைத்தேடி வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

பிறந்து ஒரு நாளேயான பச்சிளம் குழந்தையை பணத்திற்காக விற்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இக்குழந்தை பிறந்துள்ளது. குறித்த குழந்தை பிறந்து 24 மணி நேரத்திற்கு பின்பு அக்குழந்தையை பணத்திற்காக வேறொருவருக்கு அதன் தாயார் விற்றுள்ளார்.

இதில் குறித்த குழந்தையை பணத்திற்கு வாங்கிய குடும்பஸ்தர்களை தாம் கைதுசெய்துள்ளதுடன் குழந்தையையும் மீட்டுள்ளதாக யாழ்.மாவட்டபிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். மேலும் குறித்த குழந்தையின் தாயார் தலைமறைவாகியுள்ளதால் தற்போது கைது செய்ய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-4)

# வாரம் ஒரு தகவல்

## உங்களிடம் ஒரு யோசனை

"சேர்... ஒரு முக்கியமான விடயம்... தொடர்பாக உங்களிடம் யோசனை கேட்க வேண்டும்!"

"கேளுங்கள்... சொல்கிறேன்!"

"உடம்பிலே பச்சை குத்துகின்றார்கள் அல்லவா... அதை அழிப்பதற்கு ஏதேனும் வழி இருக்கின்றதா?"

"இதுவரைக்கும் இல்லாமல்தான் இருந்தது... இப்போது அதற்கும் ஒரு வழியை கண்டுபிடித்து விட்டார்கள்!"

"யார் அவர்கள் சேர்?"

"பிரிட்டனிலே உள்ள NHS வைத்தியசாலையில் உள்ளவர்கள்!"

"எப்படி சேர் அது?"

"லேசர் கதிர்மூலமாக அவர்கள் அந்த சிகிச்சையைச் செய்கிறார்கள்... வலி இருக்காது... காயம் ஏற்படாது... அந்த இடத்திலே தழும்பு கூட வராது! பச்சை குத்திய அடையாளமே இல்லாமல் போய்விடும்!"

"இந்த சிகிச்சை முறை சிறிது காலத்திலே எமது ஊருக்கும் .வந்து விடும். இல்லையா சேர்?"

"வரும்!"

"அப்படியென்றால் பரவாயில்லை... இனிமேல் துணிச்சலாக காரியத்திலே இறங்குவேன்!"

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஒரு தலைவரிடம் தொண்டனாக சேர வேண்டும் என்று ஆசைப் படுகின்றேன். அவருடைய பெயரையும் உருவத்தையும் என் கையிலே பச்சை குத்தினால்தான் என்னையும் அவர் சேர்த்துக் கொள்வார்!"

"அதிகமான முன் யோசனையுள்ள தொண்டர் நீங்கள்!"

"ஹி...ஹி...!"

"அது சரி... இப்படி ஒரு புத்திசாலித்தனமான யோசனையை என்னிடம் வந்து கேட்க வேண்டும் எப்படி உங்களுக்கு தோன்றியது?"

"நீங்கள் ஏற்கனவே மூன்று தடவைகள் கட்சி மாறினவர் என்கின்ற இரகசியம் எனக்குத் தெரியும்!"

"ஹி...!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

16.09.2012

(ஆவணி 31, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

அமாவாசை முற்பகல் 8.35 மணிவரை

உத்தரம் பின்னிரவு 3.28 மணிவரை

இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

சுபநேரம் 9.03-10.33 மணிவரை

**மேடம்** சூழ்நிலைக்கேற்ப குணத்தை மாற்றிக்கொள்வீர்கள், நண்பர்களின் பாராட்டு கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், தொலைபேசி மூலம் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் நல்ல திட்டங்கள் தீட்டுவீர்கள்

**மிதுனம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வாகன சுகத்தால் வளம் காணும் நாள்.

**கடகம்** பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சந்தோசங்கள் அதிகரிக்கும், உடன்பிறப்புக்கள் உதவி செய் முன்வருவர், உங்கள் கருத்துக்கு உரிய மரியாதை கிடைக்கும்.

**சிங்கம்** விருந்தினர் வருகையால் விருப்பங்கள் நிறைவேறும், பணப்புழக்கம் அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

**கன்னி** அமைதி வந்து சேர ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், தொழில் முயற்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்** மாலை நேரம் மகிழ்ச்சி தரும் விதத்தில் பயணம் ஒன்று அமையலாம், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், தேவையற்ற மனச்சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்** தொழில் முன்னேற்றத்திற்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும், குடும்பத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** வீட்டை திருத்தும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், வளர்ச்சி ஏற்பட சிலரிடம் ஆலோசனை கேட்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், ஆன்றோர் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கைமாறாக கொடுத்த பணம் திரும்பி வரலாம்.

**கும்பம்** தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் வெற்றிபெற விநாயகரை வழிபட வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**மீனம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

வளவன்


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 120 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 | 65 |
| தக்காளி | 40 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 60 | 50 | 60 |
| கரட் | 100 | 80 | 90 | 120 |
| பூசணி | 40 | 25 | 25 | 50 |
| புடோல் | 60 | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 50 | 60 | 70 |
| பாகற்காய் | 60 | 60 | 50 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 70 | 90 |
| பயற்றங்காய் | 60 | 30 | 60 | 50 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 50 | 90 |
| முருங்கைக்காய் | 20 | 40 | 60 | 40 |
| போஞ்சி | 80 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | 100 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 280 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வேலணை ஒரு வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் விழாவின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பொ.பாலசுந்தரம் பிள்ளை உரையாற்று வதையும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடமிருந்து நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் எஸ்.பி.சாமி பெற்றுக் கொள் வதையும் அருகில் நூலின் பதிப்பாசிரியர் ச. மாணிக்கவாசகர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண் டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# திருநெல்வேலி கொலை விவகாரம்; சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற கொலையோடு தொடர்புடைய இருவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். கடந்த 9 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இரும்புக் கம்பியினால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

ஆட்டோவில் வந்த இளைஞர் கும்பல் ஒன்றினாலேயே குறித்த குடும்பஸ்தர் அடித்து கொல்லப்பட்டிருந்ததாகவும் இவர்கள் வாள்கள், கம்பிகள் சகிதமே வந்திறங்கி குடும்பஸ்தரின் தலையில் அடித்து கொலை செய்ததாகவும் இரு இளைஞர்களையும் வெட்டிக் காயப்படுத்தியும் உள்ளனர் எனவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த போது,

கொலைச் சம்பவமானது முன்னைய பகை காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் பிடிபட்ட சந்தேக நபர்கள் இருவரும் அதேயிடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனைய சந்தேக நபர்களையும் விரைவில் கைதுசெய்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுரைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மின்மார்க்க திருத்த வேலைகளுக்காக நாளை திங்கட் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என முல்லைத்தீவு மாவட்ட மின் அத்தியட்சகர் ப. செந்தில்செல்வன் அறிவித்துள்ளார்.

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய வீதிச் சந்தியிலிருந்து மேற்படி பிரதேசத்திற்குரிய மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-3-15)

# தமிழக அகதி முகாமில் இருந்தும் தமிழ் அகதிகள் ஆஸிக்கு பயணம்

தமிழ்நாடு, கெலவரப்பள்ளி இலங்கை தமிழர் அகதி முகாமில் ஆறுபேர் மாயமாகினர். இதில் இருவரை மைசூர் மற்றும் இந்தோனேசியாவில் மீட்டுள்ளதாகவும் ஏனையவர்கள் குறித்த விபரம் தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணை இலங்கை தமிழர் முகாமில் 149 குடும்பத்தினர் வசிக்கின்றனர். முகாமை விட்டு வேலை நிமித்தமாக வெளியே செல்வோர் முகாம் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் வருகை பதிவேட்டில் செல்லும் இடம், நேரம், காரணம் ஆகியவற்றை எழுதி செல்ல வேண்டும். தற்போது இலங்கையில் அமைதி திரும்பி வருவதால் முகாமில் வசிப்பவர்கள் தகவல் தெரிவிக்காமல் முகாமில் இருந்து சென்று வருகின்றனர்.

சில மாதத்துக்கு முன் அவுஸ்திரேலியா அரசு, இலங்கை தமிழர்களை தங்கள் நாட்டுக்கு வருமாறும் மாதம் ஒன்றரை இலட்சம் ரூபாய் ஊதியத்துடன் வேலை தருவதாகவும் உறுதியளித்தது.

இதன் விளைவாக தமிழகத்தின் பல முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் அவுஸ்திரேலியா செல்லும் ஆர்வத்தில் அரசு அனுமதி பெறாமல் முகாம்களை விட்டு மாயமாகி வருகின்றனர்.

ஓசூர் கெலவரப்பள்ளி முகாமில் ஒரு வாரத்துக்கு முன்னர் ஆறுபேர் மாயமாகினர். இவர்களில் இருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# முக்கியமான சட்ட நியமங்களை தமிழில் மொழிபெயர்க்க முடிவு

## அமைச்சர் வாசுதேவ பணிப்பு

(கொழும்பு)

சட்டப் புத்தகத்தில் ஒருசில விடயங்கள் தமிழ்மொழியில்இல்லையென்பதால் ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்க மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

குற்றவியல் மற்றும் அரசியல் ரீதியற்ற சட்டமூலம் (சிவில்), நியாயமற்ற செயற்பாடுகளுக்குரிய சட்ட நியமங்கள் தொடர்பான 1979 இலக்கம் 15 இற்கு உரிய நியமம், சாட்சிகளுக்கு கட்டளைச்சட்டம், தண்டனை சட்ட மூலம் போன்றன தமிழ் மொழிபெயர்ப்பின்றி இருப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் மட்டுமன்றி நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் தமிழ் மொழியில்சட்ரீதியானசெயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத அசௌகரியங்கள்காணப்படுவதாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் பொறுப்புவாய்ந்த நிறுவனம் மற்றும் சட்டவாக்க பிரிவுடன் கலந்தாலோசித்து மிக முக்கியமான சட்ட நியமங்களை தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கு தேவையான செயற்பா டுகளை அமைச்சர் மேற்கொண்டுள்ளார். இதனை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ-2)


# அறிவித்தல்

2012.06.16 வரையும் வைத்திய பணிப்பாளராக சென்றல் நேர்ஸிங் கோமில் பல வருடங்களாக கடமை ஆற்றிய வைத்திய கலாநிதி

**Dr.R.தெய்வேந்திரன்**

தற்சமயம் எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்

காலை 9.00மணி-1.00 மணி

மாலை 3.30 மணி- 5.30மணி வரையும் நோயாளர்களை பார்வையிடுவர்.

நிர்வாகம், புதிய யாழ். வைத்தியசாலை,
வெளிநோயாளர் பிரிவு,
335, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

(சி/1059) தொ.பே.இ.:-0212219332, 0214591202


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி யோகநாதன்

### (யாழ். மாநகரசபை ஊழியர்)



சங்குவேலி வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி யோகநாதன் 14.09.2012 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், குணரத்தினம்- புனிதமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாமஞ்சுளாவின் அன்புக்கணவரும், ஷாணுயா, வோயினியின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 16.09.2012 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணி அளவில் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் இப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி,
மானிப்பாய்.

(431)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்கு பின்
உடனடியாக பதிவு செய்து 30% வரையிலான கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் இலக்கை சரியாக தீர்மானிக்க
சரளமாக ஆங்கிலம் கதைப்போம்

02 Months FULL TIME
கணனி மற்றும் விசேட பயிற்சிகளுடன் கூடிய முழுநேர
ஆங்கில பாடநெறி

ENGLISH + IT & SKILLS TRAINING
02 மாதத்தில் தரம்வாய்ந்த 03 சான்றிதழ்கள்
Admission Fee: 2,000/= Course Fee: 21,500/=

ஆரம்பத்திலிருந்து கற்பதற்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி (சி/1062)



DIPLOMA IN SPOKEN ENGLISH
Duration: 03 Months (Mon - Thu) Fee: 12,500/=
Free study Materials பாடநெறிகள் ஆரம்பம்: 10.09.2012
ஆண், பெண் இருபாலாருக்கும் பாதுகாப்பான தங்குமிட வசதி

GOLDEN COLLEGE
CITY CAMPUS
548, Peradeniya Raod, Kandy. 0812 20 55 44 | 0777 44 62 52
A TRAINING INSTITUTE REGISTERED WITH THE TVEC UNDER P09/0148


# மண்ணெண்ணெய் முத்திரை பெறுவதற்கு நீண்டதூரம் அலைய வேண்டியுள்ளது

## கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் தற்போது பதிவு செய்யப்பட்ட படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரத்திற்கான மானிய முறையிலான மண்ணெண்ணெய் பெறுவதற்கான முத்திரையை பெறுவதற்கு கடற்றொழிலாளர்கள் பலர் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆழியவளை போன்ற பிரதேசத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் அரசினால் வழங்கப்படும் மானியமுறையிலான மண்ணெண்ணெய் பெறுவதற்கான முத்திரைக்கு கையொப்பம் இடுவதற்கு தாம் காலை 6 மணிக்கு தமது பிரதேசத்தில் இருந்து பல மைல்தூரம் பயணம் செய்தே கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

அங்கு சென்றும் நீண்ட வரிசையில் நின்றே பலமணி நேரம் காத்திருந்து மண்ணெண்ணெய் பெறுவ்தற்கான முத்திரைக்கு கையொப்பம் இட வேண்டியுள்ளது.

இதனால் தாம் பல சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியதரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தத்தமது பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் வைத்தே மண்ணெண்ணெய் பெறுவதற்கான முத்திரையை தமக்கு வழங்க கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளரும் அந்தந்த பிரதேச கடற்றொழில் பரிசோதகர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-64)


## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக் கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

– அடியான்

(401)

YARL Properties
(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com



# காணவில்லை



மாவட்டபுரம் கொல்லங்கட்டியை பிறப்பிடமாகவும், தற்காலிகமாக காளையடி, பண்ணாகத்தை வசிப் பிடமாகவும் கொண்ட **பத்மநாதன் சிவகரன் (அப்புச்சி)** வயது 15 என்பவரை கடந்த 28.08.2012 தொடக்கம் காணவில்லை. மூக்கில் சிவந்த மச்சமுடையவர். நிறமானவர். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

TP :- 0770066037, 0778515318, 0773618580

தகவல் : அக்கா - கயல்விழி (கௌரி)


## பொதுக்கூட்டம்

கல்வயல் விவசாய சம்மேளத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கல்வயல் சண்முகானந்தா பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய அங்கத்தவர்கள் தெரிவு நடைபெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு செயலாளர் வேதநாயகம் கேட்டுள்ளார். (அ-3-29)

## தீவிபத்தில் ஐந்து வீடுகள் எரிந்தன

பேலியகொடைநுகே வீதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பலகையினால் அமைக்கப்பட்டிருந்த ஐந்து வீடுகள் முழுமையாக எரிந்து நாசமாகின.

பொலிஸார் தீயணைப்பு சேவை பிரிவினர் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சுவாதி 4<br>உயரம்:- 5'10"<br>கி.பா:-16.5, 4 இல் செவ்.<br>தொழில்:-MBBS டாக்டர்<br>B/421 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கேட்டை 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-60<br>தொழில்:- தகவல் தொழில்நுட்பம் UK Student visa<br>G/451 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 2<br>கி.பா:-19.5<br>தொழில்:-Bsc (IT)<br>B/422 | பிறப்பு:- 1992 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கேட்டை 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:-20.25<br>G/162 |
| பிறப்பு:-1986 றோ.க. வேளாளர்<br>நட்சத்திரம்:-பூசம் 1<br>உயரம்:-5'6"<br>கி.பா:-40.5<br>தொழில்:-கலைப்பீட இறுதியாண்டு<br>B/423 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :சதயம் 2<br>உயரம்: 5'4"<br>கிரகபாவம்: 35.25,<br>தொழில்:-அரச வங்கி உத்தியோகத்தர்<br>G/127 |
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 4<br>உயரம்:-5'3"<br>கி.பா:-32.25,<br>தொழில்:-Bsc முகாமைத்துவ உதவியாளர்<br>B/424 | பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 82.5, 7 இல் செவ்<br>G/217 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி



AFTER A/Ls | உங்களது இலக்கு என்ன? WANT TO BECOME A LAWYER?
சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சைக்கு உங்களை தயார்படுத்தும்
சட்டக்கல்லூரி அனுமதி வகுப்பு
கண்டியிலும் வவுனியாவிலும்
தமிழ் மொழி மூலம்
தகைமைகள்:
இம்முறை A/L எழுதியவர்கள்,
A/Lல் 03 பாடங்களில் சித்தயடைந்தவர்கள்
அத்துடன் O/Lல் தமிழ் மற்றும்
ஆங்கிலத்தில் 'C' சித்தியை பெற்றவர்கள் (சி/1062)
இலகுவாக, குறைந்த செலவில், குறுகிய காலத்தில்...
நீங்களும் ஒரு சட்டத்தரணியாகலாம்!
விரிவுரையாளர் ஹபீப் றிபான் | விபரங்களுக்கும் அனுமதிக்கும் 0777 44 62 52
பல்கலைக்கழக மாணவர்கள், வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், இம்முறை A/L எழுதிய மாணவர்கள் மற்றும் மேற்சொன்ன தகைமைகளையுடைய அனைவரும்
GOLDEN COLLEGE
CITY CAMPUS | 548, Peradeniya Road, Kandy. | 0812 20 55 44 | 0775 66 16 16







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# கலாசார விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசார பேரவையின் கலை, கலாசார விழாவும் பூந்துணர் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பூநகரி வாடியடி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலாசாரப் பேரவைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி. கேதீஸ்வரன் மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-84)

# கிழக்கில் ஆட்சியமைக்க அரசுக்கு ஆதரவு தருகிறேன்

## ஹக்கீம் கூறினார் என்கிறார் றிஷாத்

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத் தேர்தலுக்குப் பின்னர் ஆளும் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்கில் ஆட்சி அமைப்பதற்கு அரசுக்கு ஆதரவு வழுங்குவதாகத் தெரிவித்ததாக அமைச்சர் றிஷாத் பதியுதீன் பிபிசியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அங்கு தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளியாகி ஒருவாரமாகியும் கிழக்கில் இன்னும் யார் ஆட்சியை அமைப்பார்கள் என்று தெரியாத ஒரு சூழலே நிலவுகிறது.

7 இடங்களை மட்டுமே வென்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யதார்த்தமாக சிந்தித்து, விட்டுக்கொடுப்பு மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் எனவும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கூறுகிறார்.

இந்தச் சூழ்நிலையிலேயே அமீர் அலியை தமது கட்சியும்,தேசியக் காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவும் பரிந்துரை செய்துள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

எனினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை தனது நிலைப்பாட்டை வெளியிடாத சூழலில் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்கப்படுவதில் இழுபறி தொடருகிறது.

கிழக்கு மாகாணசபையில் ஆளும் கூட்டணி 15 இடங்களையும் தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 இடங்களையும் பெற்றுள்ள நிலையில் முதலமைச்சர் பதவி என்பது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கே அளிக்கப்பட வேண்டும் என்பதில் நியாயம் உள்ளது.

இலங்கையிலுள்ள 6 மாகாண சபைகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே முதலமைச்சராகவுள்ளனர் எனவும் வடமாகாணத்துக்கு தேர்தல் நடைபெறும் போது தமிழர் ஒருவர் முதலமைச்சராவது உறுதியாகும் எனவும் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகும் வாய்ப்பும் உள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# யுத்த பிரதேசத்திற்குள் ஆயுதங்கள் மீட்கப்பட்டன

## பொலிஸார் தகவல்

முல்லைத்தீவு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மறைத்துவைக்கப்பட்டிருந்த பெருமளவிலான ஆயுதங்கள் கடந்த வாரத்தில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஈழப்போரின் இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற இடமான முள்ளிவாய்க்காலில் கடந்த 10 ஆம் திகதி ரி.56 ரக துப்பாக்கி ரவைகள் 16 ஆயிரத்து 74 உம் ஏனைய ரவைகள் 400 உம் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அதே நாளில் முழங்காவில் பகுதியில் சி.4.ரக வெடிமருந்து 950 கிராமும் 5 கைக்குண்டுகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதில் சம்பந்தப்பட்ட 5 நபர்களை தாம் கைது செய்து உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

செல்வபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை 39 மோட்டார் குண்டுகளும், 2 பரா குண்டுகளும் செட்டிகுளம் மதவாச்சிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை 3 ஆயிரத்து 100 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

# மருந்துப் பொதிகளில் தமிழ், சிங்கள மொழிகள் பொறிக்கப்பட வேண்டும்

## மா.கொ.நிலையம் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியலமைப்பிற்கு அமைவாக சிங்களம் மற்றும் தமிழ் அரச கரும மொழிகளாக இருந்தாலும் மேலைத்தேய மருந்துப் பொதிகளில் தகவல் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே காணப்படுகிறது.

இது தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் லயனல்குருகே முன்வைத்த முறைப்பாடு அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவை முன்னிலையில் இரண்டு தடவைகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதற்குப் பொறுப்புக்கூறுபவர்களாக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், சுகாதாரக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர், சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அஜித் மெண்டிஸ், வைத்திய சேவை வழங்கல் வைத்தியர் கமல் ஜெயசேன, வைத்தியர் சாலக அதாவுத, தேசிய மருந்து உற்பத்தியாளர்களின் சங்கத்தின் தலைவர், நுகர்வோர் அதிகாரசபை தலைவர் போன்றோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அதிகமான மருந்தகங்களில் இருக்கும் பயிற்சி பெற்ற மருந்து வழங்குநர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் அல்லது தமிழ், ஆங்கிலம் அல்லது சிங்களம் மாத்திரம் தெரிந்தவர்களே.

ஆகையால் இங்கு அனைத்து வகையான மருந்துகளினதும் வகை, அதன் உள்ளடக்கம், பக்கவிளைவுகள், பாவனை முறைகள் தொடர்பான விளக்கம் சிங்களம், தமிழ் மொழிகளில் இருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதற்கிணங்க நாம் மேற்குறிப்பிட்ட பிரதிவாதிகளுக்கும் முறைப்பாட்டாளர்களுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பரிந்துரைகளை முன்வைக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய சுகாதாரக் கொள்கையொன்றை வடிவமைக்க முயற்சி செய்யும் இச்சந்தர்ப்பத்தில் மருந்துகள் தொடர்பான தேசியக் கொள்கையொன்று உருவாக்கப்படுமானால் அவசியமாக மருந்துகள் தொடர்பான தகவல் கட்டாயமாக சிங்களம் மற்றும் தமிழில் இருக்க வேண்டும். மிகச் சிறந்த ஒரு சுகாதார சேவையொன்றை வழங்குவதற்கான முன்மாதிரியாக அது அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

# அமெ.வெளியிட்ட வீடியோ படத்தை எதிர்த்து முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(காத்தான்குடி)


அமெரிக்காவில் இஸ்லாமியர்களின் இறை தூதரான முகமது நபியை இழிவுபடுத்தும் வகையில் வீடியோ படமொன்று வெளியிடப்பட்டதை கண்டித்து வெள்ளிக்கிழமை கிழக்கிலங்கையிலும் முஸ்லிம்கள் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்கள்.

மட்டக்களப்பு- காத்தான்குடி தாறுல் அதர் அத்தவ்வியா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்திலும் கண்டனப் பேரணியிலும் இஸ்லாமிய அறிஞர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

காத்தான்குடி ஜாமியுல் அதர் ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்னர் கூடிய முஸ்லிம்கள் அமெரிக்காவுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் எதிராக பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த காத்தான்குடி தாறுல் அதர் அத்தவ்வியா அமைப்பின் பிரசாரகரான மௌலவி வி.எம்.அஸ்பர், உருவ வழிபாட்டை இஸ்லாம் எதிர்க்கின்றது.

குறித்த வீடியோவில் இறை தூதரான நபிகள் நாயகத்திற்கு உருவம் கொடுக்கப்பட்டிருப்பது இஸ்லாமியர்களை கொச்சைப்படுத்தும் செயலாகவே நாம் கருதுகின்றோம் என்று கூறினார். (அ-2)



ஜனாதிபதி செயலகத்தினால் வடமாகாண கல்வித்திணைக்களத்தினூடாக நாடு தழுவிய ரீதியில் வாழ்க்கைத்திறன் ஒன்றாக நிகழ்ச்சித் திட்டத்தின் கணனி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் இணைந்து அதிபர் ஒருவருக்கு கணனி கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மேஜர் மீது தாக்குதல்; சரத் பொன்சேகா விசனம்

இராணுவப் புலனாய்வுத்துறையின் மேஜர் ஒருவரை அமைச்சர் மேவின் சில்வாவின் மகன் மாலக்கசில்வா தாக்கிய சம்பவம் குறித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடும் விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

குறித்த இராணுவ அதிகாரியை தாக்கிய மாலக்கசில்வாவை கைது செய்ய முடியாதுள்ளமை குறித்து அவர் தலைமையின் மீது குற்றச் சாட்டை சுமத்தியுள்ளார்.

தாக்குதலை நடத்திய மாலக்க சில்வாவை கைதுசெய்யாமல் இராணுவத் தலைமை தாக்குதலுக்கு உள்ளான இராணுவ அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளமை குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதலுக்கு உள்ளான இராணுவ மேஜர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவரை சிகிச்சைகள் இன்றி வீட்டுக்கு அனுப்பிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் வைத்தியர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# இராணுவ அதிகாரியை எனது மகன் தாக்கவில்லை

## அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

இராணுவ அதிகாரி எவரையும் தனது மகனான மாலக்க சில்வா தாக்கவில்லை என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

எனது மகன் ஒருபோதும் இராணுவ அதிகாரியை தாக்கவில்லை. அவர் ஒரு நபரை தாக்கியிருக்கலாம். ஆனால் நிச்சயமாக இராணுவ அதிகாரியை தாக்கவில்லை என கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் அவர் கூறினார்.

சிறுபராயத்தில் ஏனையோருடன் நீங்கள் சண்டை பிடித்திருப்பீர்கள். இளம் பருவத்தில் நீங்கள் சண்டையிட்டிருப்பீர்கள். எனது வயதில் கூட நீங்கள் யாருடனும் சண்டையிட்டிருப்பீர்கள். இதை நிறுத்த முடியாது. ஏனெனில் நாம் மனிதர்கள். இது எனது மக னுக்கும் பொருந்தும். தனது மகன் ஏதேனும் செய்திருந்தால் பொலிஸார் முறையான நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றார். (அ-2)

# ஆளும் கட்சியின் சலுகைகளுக்கு ஒருபோதும் அடிபணிந்து விடக்கூடாது

## உறுப்பினர்களை கோருகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

ஆளும் கட்சியினால் வழங்கப்படும் சலுகைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அடிபணிந்து விடக்கூடாது என அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வெற்றியீட்டிய உறுப்பினர்களை தமது இல்லத்திற்கு அழைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர்களை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொள்ளாத அரசாங்கம் பணத்தையும் சலுகைக்களையும் பயன்படுத்தி ஆட்சி அமைக்க முயற்சிக்கின்றது.

நாம் வயதடைந்து விட்டோம் கட்சியின் எதிர்காலம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# விரிவுரையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

## விரைவில் என்கிறார் சுனில்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு இரண்டொரு தினங்களில் தீர்வு காணப்படும் என உயர் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் சாத்தியமாக நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர் இன்னும் இரண்டோ அல்லது மூன்றோ தினங்களில் சுமுகமான தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளிலும் தாமதம் ஏற்படலாம்.

இது தொடர்பாக குறித்த அமைச்சின் செயலாளரிடம் கேட்ட போது இத்தகைய விடயங்களைக் கருத்திற் கொண்டு சில தினங்களுக்குள்ளேயே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 2012.09 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1795-ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் கேப் டவுண் நகரைக் கைப்பற்றியது.

★1810-மிகுவேல் ஹிடால்கோ என்ற மதகுரு மெக்சிக்கோவின் விடுதலைப் போரை ஆரம்பித்தார்.

★1812-முதலாம் நெப்போலியன் மொஸ்கோவினுள் நுழைந்ததை அடுத்து ரஷ்ய மக்கள் நள்ளிரவில் நகரை தீயிட்டுக் கொளுத்தினர். மொஸ்கோ நகரம் அடுத்த சில நாட்களில் முற்றாக எரிந்தது.

★1852-லண்டனில் மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.

★1887-மென்பந்தாட்டம் முதன்முதலில் சிக்காகோவில் விளையாடப் பட்டது.

★1908-ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டது.

★1920-நியூயோர்க் நகரில் ஜே.பி.மோர்கன் கட்டடத்தின் முன்னால் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் 38 பேர் கொல்லப்பட்டு 400 பேர் காயமடைந்தனர்.

★1963-மலாயா, சிங்கப்பூர் மற்றும் போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.

★1970-ஜோர்தானில் நான்கு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீன தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதை அடுத்து மன்னர் ஹீசெயின் இராணுவ ஆட்சியை அறிவித்தார்.

★1975-பப்புவா நியூகினி அவுஸ்திரேலியாவிடமிருந்து விடுதலை பெற்றது.

★1978- ஈரானில் டபாஸ் நகரை 7.5 தொடக்கம் 7.9 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1982-லெபனானில் பாலஸ்தீன அகதி முகாம்களான சப்ரா, ஷட்டீலா ஆகியவற்றில் லெபனானிய இராணுவத் துணைப்படையினரால் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர்.

★1987-ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.

★2000-இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் உலங்குவானூர்தி விபத்தில் மரணமானார்.

★2007-தாய்லாந்தில் 128 பேரை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று வீழ்ந்ததில் 89 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1916-எம்.எஸ்.சுப்புலட்சுமி, இந்திய கர்நாடக இசைப் பாடகி (இ.2004)

★1923-லீ குவான் யூ., சிங்கப்பூரின் முன்னாள் தலைவர்

★1945-ப.சிதம்பரம், இந்திய அரசியல்வாதி

### இறப்புக்கள்

★1736-கப்றியேல் ஃபாரென் ஹைட், ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1686)

★1824-பதினெட்டாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி.1755)

★1932-றொனால்ட் றொஸ், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (பி.1857)

★1994-சு.பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தின் பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் (பி.1928)

★1998-கோ.கேசவன், தமிழியல் ஆய்வாளர் (பி.1946)

★2009-தென்கச்சி கோ சுவாமிநாதன், தமிழகப் பேச்சாளர், எழுத்தாளர்

### சிறப்பு நாள்

★உலக ஓசோன் பாதுகாப்பு தினம்

### ம.ச.சுப்புலட்சுமி



எம்.எஸ்.சுப்புலட்சுமி என்று பரவலாக அறியப்படும் மதுரை சண்முக வடிவு சுப்புலட்சுமி ஒரு புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகியாவார். 1998 ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காள மொழி, இந்தி, சமஸ்கிருதம், குஜராத்தி ஆகிய பல மொழிகளில் இவர் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் உலகின் பல நாடுகளுக்கும் பண்பாட்டுத் தூதுவராகச் சென்று பல நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். மேலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் இவர் தன் அரங்கேற்றத்தை நிகழ்த்தியுள்ளார்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி 1916 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி அன்று தேவதாசி குலத்தைச் சேர்ந்த இசைக்கலைஞர் மதுரை சண்முகவ்டிவு அம்மாளுக்குப் பிறந்தார். அவரது தந்தையார் சுப்பிரமணியஐயர் என்று பின்னாட்களில் போட்டிகளில் சுப்புலட்சுமி தெரிவித்து இருக்கிறார். இவர் தம் சகோதரர் சக்திவேல், சகோதரி வடிவாம்பாள் ஆகியோருடன் இசை தொடர்பான சூழலில் வளர்ந்தார்.

இவரது தாயார் சண்முகவடிவு போன்றே வடிவாம்பாள் வீணை மீட்டுவதில் ஆர்வம் மிக்கவர். சக்திவேலுக்கு மிருதங்கத்தில் ஈடுபாடு அதிகம். ஆயினும் அவர்கள் இருவரும் இளவயதிலேயே காலமாகி விட்டனர். சுப்புலட்சுமியின் பாட்டியார் அக்கம்மாள் ஒரு வயலின் கலைஞர்.

எம்.எஸ். சுப்புலட்சுமி சிறு வயதில் தன் தாயாருடன் கச்சேரிகளுக்குச் சென்ற போது பெரிய கலைஞர்களே சுப்புலட்சுமியின் குரல் வளத்தை வாழ்த்தியதும் உண்டு. இவரது முறையான கல்வி ஐந்தாம் வகுப்பு வரையே அமைந்தது.

#### சினிமாவினுள் பிரவேசம்

அந்தக் காலத்தில் பாடகிகள் தான் நடிகை ஆகமுடியும். எம்.எஸ். சுப்புலட்சுமியின் இனிமையான குரலைக்கேட்ட தயாரிப்பாளர் கே.சுப்பிரமணியம் அவரைத் தனது சேவாசதனம் படத்தின் கதாநாயகியாக நடிக்க வைத்தார்.

#### திருமணம்

சகுந்தலை படத்தைத் தயாரித்தவர் கல்கி சதாசிவம் ஆவார். இவர் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசையில் ஈடுபாடு கொண்டதனால் 1940 ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் இருவரதும் இணைப்பால் இசை உலகு நன்மையடைந்தது.

#### விருதுகள்

பல்வேறு அமைப்புக்கள் இவருக்கு பல விருதுகளை வழங்கி பெருமைப்படுத்தியுள்ளன. அவை யாவன, பத்மபூசண் (1954), சங்கீத கலாநிதி (1968), மக்சேசே பரிசு (1974), பத்ம விபூசண் (1975), காளிதாச சன்மான் (1988), நாட்டு ஒருமைப் பாட்டிற்கான இந்திரா காந்தி விருது (1990), பாரத ரத்னா (1998) ஆகியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிக்கொடி காட்டிய மோ.சைக்கிள் இலக்க தகடு பொய்யானது

## பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நெல்லியடி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடி காட்டியவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு பொய்யானது என யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியை ஏந்தியவாறு அவ்வார்ப்பாட்டத்திற்குள் சுற்றிச்சுழன்று கொண்டு மாயமாக மறைந்தனர்.

இப் புலிக்கொடி விவகாரம் தொடர்பாக விரைவில் விசாரணை செய்யுமாறு அவ் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடுகள் எனக் கூறிய சில இலக்கங்கள் பருத்தித்துறை நீதிமன்றினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிள் இலக்கங்களின் விபரங்களை பெறுவதற்கு மோட்டார் வாகன திணைக்களத்திடம் பொலிஸார் தொடர்பு கொண்ட போது அவ் இலக்கங்களில் ஒன்று பொய்யானது என்றும் அவ்வாறான இலக்கம் இங்கு பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மற்றைய இலக்கம் ஆட்டோ ஒன்றினுடையது என்றும் கண்டறியப்பட்டதும் அது தென்பகுதியினை சேர்ந்தவருடையது என்பதும் தெரிந்ததே. ஆட்டோ இலக்கத்துடன் தொடர்புடைய நபருக்கு ஒரு முறை அழைப்பாணை விடுத்தது என்றும் அங்கு அவர் சமூகமளிக்காமையால் மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கும் அவர் சமூகமளிக்காவிடின் யாழில் இருந்து பொலிஸ் குழு ஒன்று அங்கு சென்று அந்நபரை கைது செய்து பருத்தித்துறை நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# மாணவர்களை வீதியில் இறக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

சிறுவர்களின் உயிர்களை பணயம் வைத்து அதிகாரத்தை கைப்பற்ற சில அரசியல்வாதிகள் முயற்சிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுகேகொட சமுத்திராதேவி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களின் உயிர்களை அரசியல் இறையாக கொள்வதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை.

நாட்டிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

பாடசாலை மாணவர்களை வீதியில் இறக்குவதற்கான பாரிய முயற்சியொன்று நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சிறுவர் மனங்களை மாசுபடுத்தாமல் அவர்களின் உலகை அவர்களுக்கே விட்டு வைப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார். (அ-2)



பொருளாதார அபிவிருத்த அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்ட நிதி அனுசரணையுடன் கிளி.மாவட்டம் கண்டவாளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புளியம்பொக்கணை சந்தியில் அரச கால்நடை வைத்தியர் அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்டின், கிளி.மாவட்ட கால்நடை உற்பத்தி திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். கௌரிமுகுந்தன் ஆகியோர் இணைந்து கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்:- சிவநகர் செய்தியாளர்.)

# மனித உ.விசேட ஆணையாளர் விவகாரம்;

# நாடுகளின் கருத்துக்கு இந்தியா இணக்கம்

## இந்திய சபாநாயகர் மீராகுமார் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மனித உரிமை ஜனநாயகம் மற்றும் சட்டம், ஒழுங்கு என்பவற்றை ஆராய விசேட ஆணையாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பான பெரும்பான்மை நாடுகளின் கருத்தை இந்தியாவும் ஏற்பதாக இந்திய சபாநாயகர் மீராகுமார் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டில் பங்கேற்பதாக இலங்கை வந்துள்ள இந்திய சபாநாயகர் நேற்று முன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து சந்தித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

58 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற அமர்வின் போது விசேட ஆணையாளர் நியமிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. இதற்கு பெரும்பான்மையான நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், இம்முறை விசேட ஆணையாளர் குறித்து ஆராயப்பட்டது. அடுத்த வருடம் நடைபெறும் தலைவர்கள் மாநாட்டிலே இறுதி முடிவு எட்டப்படும். இந்தியா பெரும்பான்மை நாடுகளின் கருத்தை ஏற்கிறது என்றார்.

இலங்கையில் 58 ஆவது மாநாடு நடத்தப்பட்டது குறித்து கருத்து தெரிவித்த அவர் 58 ஆவது பாராளுமன்ற மாநாடு இலங்கையில் நடைபெற்றது. ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. சபாநாயகர் அடங்கலாக சகலரும் இதனை சிறப்பாக நடத்தி வைக்க பங்களித்தனர். இலங்கை மக்கள் மிகவும் விருந்தோம்பல் குணமுள்ளவர்கள் என்றார். (அ-2)

# சிறுவர் இல்லங்களில் உளசமூக மேம்பாடு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள 15 சிறுவர் இல்லங்களில் உளசமூக மேம் பாட்டு நிகழ்வுகள் நேற்று தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடத் தப்படவுள்ளதாக அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வக்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ் உளசமூக மேம்பாட்டுநிகழ்வுக ளில் Art Therapy, Creative Therapy மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது. இதன்மூலம் சிறு வர் இல்லங்களில் உள்ள சிறுவர்களு டைய உளசமூக மேம்பாட்டினை ஏற் படுத்தும் வகையில் நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதுடன் சர்வோதயா நிறுவனத் தின் உதவியுடன் வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி காரசபை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

A/L
பரீட்சையின்
மற்றும்
பெறுபேறுகளின்
பின்பு
உங்கள் வளமான
எதிர்காலத்திற்கான
முதல் வாய்ப்பு!!
UGC
அங்கீகாரமுடைய
மற்றும்
சர்வதேச தரமுடைய
கணினி பட்டதாரியாகும்
வாய்ப்பு யாழ் மண்ணில்...

NORTH LANKA IIT & ISLES INTERNATIONAL UNIVERSITY
Jaffna, Sri Lanka
UK, IRELAND, MALAYSIA, KENYA & ST.KITS & NEVIS
இணைந்து வழங்கும்
மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

5 வது Batch இல் இணையுங்கள்!

B.Sc. in Computer Science
B.Com with Computer App.
Duration: 1 -- 3 Years with A/L / O/L

P.G.Dip. in Comp. Sc. >> M.Sc.
MBA >> DBA
Duration: 1 Year Any Degree

மேற்படி புலமைப் பரிசில் திட்டம் எமது Senate உறுப்பினர்களது வழிகாட்டலில்..

Senate of NLIIT
Prof.K.Devarajah
Prof. T.Velnumby
Prof.V.Chinnathamby
Prof. V.P.Sivanathan
Dr.Sarathchandra
Dr.R.Surenthirakumar
Dr.S.J.M.Sahajan
Lect.S.Anpalagan
Mr. Angajan Ramanathan

மேலதிக விபரங்களுக்கு ...
NORTH LANKA IIT
#1 F3, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Phone :- 021567 7774

வெல்லுங்கள்!
10 % முதல் 70 % வரை கற்கைநெறிக் கட்டணம் Free!

(சி/1058)

எமது வாழ்த்துக்கள்!!



Dr. C.A Sarathchandra - DBA
(எமது பல்கலைக்கழகத்தில் DBA பட்டம் பெற்று தற்போது World Bank இனது தெற்காசிய பிராந்தியத்திற்கான ஆலோசகராவார். அத்துடன் Merchant Bank, Peoples Bank, HDFC Bank என்பவற்றின் உயரதிகாரியுமாவார். இவர் தற்போது NORTH LANKA IIT இனது Senate உறுப்பினருமாவார்.)

Mr. R.Ganaraj - MBA
(NSB - Pointpedro Branch)

Mr. S.Naathasoruban - MBA
(NSB - Dehiwala Branch)

Mr. S.Prashanthan - M Sc.
(NSB - Jaffna Branch)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

42



அக்கபோதி மன்னர்கள்காலத்துக்குரிய புத்தர் சிலை

### ஸ்ரீசங்கபோதி

...அக்கபோதி ஸ்ரீசங்கபோதியின் ஆட்சியில் தமிழரின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. படைத் தலைவனும் இரு அமைச்சர்களும் தமிழர்களாக விளங்கினர். மன்னனின் பிரதான அமைச்சனாக பொத்தகுட்டன் என்பவன் விளங்கினான். அவன் பெருஞ்செல்வந்தனாக இருந்தான்.

(செங்கை ஆழியான்)
கலாநிதி. கந்தையா. குணராசா
கமலா குணராசா

மத்ததம்பியா என்ற அற்புதமான தியான மண்டபத்தினை நிர்மாணித்து கிராமங்களுக்கு வழங்கினான். அத்தோடு கப்புறா, பிரிவேனா, குருந்தபில்லகா முதலான கிராமங்களில் கட்டடங்கள் அமைத்து விகாரைகளுக்கு வழங்கினான்.

ஸ்ரீசங்கபோதியின் சேனைத் தலைவனாக விளங்கிய பொத்தசதா என்ற தமிழன், ஜேத்தவன விகாரைக்கு ஒரு பிரிவேனா கட்டிக் கொடுத்தான். மகாகந்தன் என்ற தமிழ் அமைச்சன், தனது பெயரில் ஒரு பிரிவேனா கட்டிக் கொடுத்தான். யுவராஜாவான சங்கதீசன் என்பவன், சேகல உபராஜா பிரிவேனாவைக் கட்டி வழங்கியுள்ளான். மன்னனின் அடியொற்றி இவ்வாறு சேனாதிபதி, அமைச்சர்கள், யுவராஜா என்போர் விகாரைகளையும் பிரிவேனாக்களையும் அமைத்து வழங்கியுள்ளானர்.

மன்னனின் மனைவியான ஜேத்தா தேவி, ஜேத்தாராம என்ற கட்டடத்தை அமைத்துப் பிக்குனிகள் தங்க வழங்கினாள். மன்னனின் பிரதிநிதியாகவிருந்த மலையராஜா என்பவன் மண்டல விகாரை சேத்தியத்தில் புனித தாதுகோவில் ஒன்றினைக் கட்டிக் கொடுத்தான். லோகபாசாட கட்டடத்திற்குப் புதிதாக கூரை அமைத்து வழங்கினான். போதிதீசன் என்பவன், போதிதீச விகாரையை அமைத்துக் கொடுத்தான். ஸ்ரீசங்கபோதியின் புலத்தி நகரத்தை (பொலநறுவை) அரச உறைவிடமாகச் சில காலம் வைத்திருந்தான். அங்கு தனது பிற்காலத்தைத் தியானத்தில் கழித்தான். அவன் அங்கு இறந்ததும், இறுதிக்கிரியைகள் ஒழுங்குமுறையாக நடந்தன. அவனது சடலச் சாம்பலை மக்கள் பலர் சேகரித்து, மருந்தாகப் பேணினர். புலத்தி நகரிலிருந்த செல்வங்களும், சேனையும் அனுராதபுரத் தலைநகருக்குத் திரும்பின. பதினாறு வருடங்கள் இம்மன்னனின் ஆட்சி நிலவியது.

### பொத்தகுட்டன்

ஸ்ரீசங்கபோதியின் பிரதம அமைச்சனாக விளங்கிய பொத்தகுட்டன் என்ற தமிழ் அதிகாரி, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். யுவராஜாவாக விளங்கிய ததாசிவனைச் சிறைப்படுத்தி சிறையில் பலத்த காவலுடன் வைத்தான். நாட்டில் முறையான அரசன் ஒருவன் இன்மையால் ஏற்பட்ட கலவர நிலையைச் சீர்செய்வதற்காக பொத்தகுட்டன், தத்தன் என்ற அரச குலத்தைச் சேர்ந்த ஒருவனைப் பொம்மை ராஜாவாக்கி, ஆட்சியதிகாரத்தைத் தானே வைத்திருந்தான். தத்தன் தனது பெயரில் ஒரு விகாரை அமைப்பித்தான். இரண்டாண்டுகளின் பின்னர் தத்தன் மரணமானான். அதன்பின் பொத்தகுட்டன், ஹத்ததாடன் என்பவனை அரசனாக்கினான். ஆறுமாத ஆட்சியுடன் மரணமடைந்தான்.


## மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி

### மானவர்மன்


ஹத்ததாடன்(2) மரணமடைந்ததும் மானவர்மன் ஆட்சிப்பீடமேறினான். யார் இந்த மானவர்மன்? அவன் அரச குலமென்ன? தூபராமசமாதி சேத்தியத்தினைக் கொள்ளையிட்ட முன்னைய காசியப்பன்(2) என்ற மன்னனின் மகனே மானவர்மன் ஆவான். மானவர்மன் மலையராஜாவின் மகளான சங்கமான தேவியைக் கரம் பற்றியிருந்தான். அவளை மணந்ததும் ஹத்ததாடனுக்குப் பயந்து, இலங்கையின் வடபகுதியான உத்தரதேசத்தில் கரந்துறைந்தான். அச்செய்தி அனுராதபுர மன்னன் ஹத்ததாடனுக்குத் தெரிய வந்ததும், மானவர்மனைக் கைது செய்ய வீரர்களையனுப்பி வைத்தான். அதனை அறிந்ததும் உத்தரதேசம் பாதுகாப்பற்றதெனக் கருதி, இந்தியாவிற்குத் தப்பி ஓடினான். அக்கால வேளையில் தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சி சிறப்புற்றிருந்தது. பல்லவ மன்னனான நரசிம்மனிடம் போர்ச்சேவையில் சேர்ந்து கொண்டான். அவனையும் அவன் மனைவியையும் வரவேற்ற நரசிம்ம பல்லவன் தன் படைப்பிரிவொன்றின் தளபதியாக மானவர்மனை நியமித்தான். கந்தவேதி என்ற பிறிதொரு சிற்றரசனின் துணையும் மானவர்மனுக்குக் கிடைத்தது. இக்கால வேளையில் அவனுக்கும் அவனது மனைவி சங்காவுக்கும் நான்கு புதல்வர்களும் நான்கு புதல்விகளும் கிடைத்தனர்.

நரசிம்மபல்லவனுக்கும் மானவர்மனுக்கும் இடையில் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அந்த நட்பின் இறுக்கத்தை சூளவம்சம் சில சம்பவங்கள் மூலம் விபரிக்கும். ஒருநாள் இருவரும் யானையில் உலா வந்தபோது, இளநீர் ஒன்றினை யானையிலிருந்தவாறே பருகும் நிலை ஏற்பட்டது. இளநீரில் ஒரு பகுதியை அருந்திய நரசிம்மன், மிகுதியை மானவர்மனிடம் நீட்டினான். தீரன் முதலில் பருகியதை அருந்துகிறானா எனத் தன்னை நரசிம்மன் பரீட்சிக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட மானவர்மன், அதனை வாங்கி அருந்தினான். உடன், நரசிம்மன், அரசனிடமிருந்து பறித்து மிகுதியைத் தான் பருகினான். இருவரது நட்பு இவ்வாறு தராதரம் பார்க்காது இருந்தது. அதன்பின்னர் நரசிம்மன், உணவு, உடை, வதி விடம், சகலத்திலும் தனக்குச் சமதையாகவே மானவர்மனை நடாத்தினான்.

இவ்வாறிருக்கையில் வல்லபன் என்பவனை நரசிம்ம பல்லவனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். "தன்னிடம் போர் உதவிகேட்டு ஈழத்திலிருந்து வந்திருக்கும் மானவர்மனை, இந்த யுத்தத்திலீடுபடுத்தி, அவனை இழக்க நேரிடில், அவன் இங்கு வந்த நோக்கமே வீணாகிவிடும்" என எண்ணிய நரசிம்மன், மானவர்மனை அரண்மனையிலிருக்க வைத்துப் போருக்குப் புறப்பட்டான். "நரசிம்மனுடனான எனது நட்பு, ஆபத்துக் காலத்தில் உதவாவிடில் பலனில்லை. இந்த யுத்தத்தில் நரசிம்மன் உயிரிழக்க நேரிடில், நான் இங்கு வந்த தன் நோக்கம் நிறைவேறப்போவதில்லை. வாழ்வோ, சாவோ என் நண்பனுக் காக அமையட்டும்" என எண்ணிய மானவர்மன், எஞ்சிய படையோடு யுத்தகளம் சென்றான். நரசிம்மனும், மானவர்மனும் சேர்ந்து வல்லபனின் சேனா சமுத்திரத்தை துவம்சம் செய்து வெற்றிவாகை சூடினர். "உம்மாலேயே நான் வென்றேன்" என மானவர்மனை நன்றியுடன் காணப்பட்டான் நரசிம்மன்.



அக்கபோதி மன்னர்கள் காலத்துக்குரியது



அக்கபோதி மன்னர்கள் காலத்துக்குரிய கட்டட சிதைவுகள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கான அதிகார பகிர்வு நாட்டை பிளவுபடுத்தாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

**மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் 13 ஆம் திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அரசியல் கட்சி என்ற ரீதியில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அதிகாரப்பகிர்வு என்பது நாட்டை பிளவுபடுத்துவதாக அமையாது. அது நாட்டை பாதுகாப்பதாகவே அமையும். கடந்த கால அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

இந்த அரசாங்கம் குறித்த பிரதேசங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்த ஆர்வம் காட்டுகின்றது. தேர்தல் காலங்களில் மட்டுமன்றி சாதாரண நேரங்களிலும் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது. யாரேனும் அவர்களை விடவும் நாம் உயர்ந்தவர்கள் என நினைத்தால் அது பிழையானது.

வடக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் குழப்ப நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாக அமைந்திருந்தது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியும் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மு.காவுடன் இணக்கம்

### ஆளும்கட்சி தெரிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

விரைவில் கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை நாளை திங்கட் கிழமை முதலமைச்சர்கள் பெயரிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## பங்குச்சந்தை மோசடிகளை மறைக்கவே புதிய நியமனங்கள்

### மங்கள எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பங்குச்சந்தை ஊழல் மோசடிகளை பாதுகாக்கும் நோக்கிலேயே புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பங்குச்சந்தையில் குழப்பங்களை விளைவிக்கும் தரப்பினரை பேணிப் பாதுகாக்கும் நோக்கிலேயே அரசாங்கம் பங்குச்சந்தை நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

உட்சந்தை, தகவல் கசிவு, ஊழல் மோசடி என பல்வேறு பிரச்சினைகள் நிலவி வருகின்றன.

இந்த பிரச்சினைகளை மூடி மறைக்கும் நோக்கிலேயே பங்குச்சந்தையின் தலைவர் பதவி நாலக கொடஹேவாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பங்குச்சந்தையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை விசாரணை செய்ய முயற்சித்த காரணத்தினாலேயே முன்னாள் தலைவர் திலக் கருணாரட்ன பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது.

விசாரணைகளை இடைநிறுத்தும் நோக்கிலேயே புதிய தலைவர் நியமிக்கப்பட்டார் என்றார். (அ-2)

## 2011 ஆம் ஆண்டுக்கான இளைஞர் விருது விழா

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான இளைஞர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்விருது வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தின் 15 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிறந்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினராக சாவகச்சேரி பிரதேசத்தை சேர்ந்த எஸ்.ரி.விமலதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மேலதிக பயிற்சியை பெறுவதற்காக இந்தியா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது (அ-3-37)

# கிளி.வலய ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**தரம் 04**

க.சதுசாயினி (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்), சு.கவிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), கே.கிசேரன் (கிளி/பளை மத்திய கல்லூரி)

**தரம் 05**

ஜெ.திவ்யா (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி), ஜெ.ஜெயனிகா (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்), பா.கஜதீபன் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 06**

வி.சயனி (கிளி/சென்.தெரேசா மகளிர் கல்லூரி), இ.அபிநயா (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), பா.சிவேகா (கிளி/முருகானந்தா கல்லூரி)

**தரம் 07**

தே.தயிரிப்ரா (கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), ந.அபிராமி (கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்), தே.யாழினி (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்)

**தரம் 08**

சு.அக்ஷனா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சி.கயானி (கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா), த.நிரேரகா (கிளி/முருகானந்தா கல்லூரி)

**தரம் 09**

தி.கீர்த்தனா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), மோ.டினோஜிதா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), சூ.துவரேகா (கிளி/முருகானந்தா கல்லூரி)

**தரம் 10**

சி.வினீபா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ச.மேனகா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), ந.காயத்திரி (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை)

**தரம் 11**

யோ.கர்சிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ல.மேகலா (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்), க.சஜிந்தினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பாடசாலை)

**உரத்து வாசித்தல்**

**தரம் 03**

கெனி கலிஸ்லஸ் நிருசன் (கிளி/ பளை மத்திய கல்லூரி), ஜெ.டிலானி (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) சி.சேகரன் (கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம்)

**தரம் 04**

உ.ஜெதுசிகா (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), அ.டசிந்தா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), கே. கிசேரன் (கிளி/பளை மத்திய கல்லூரி)

**தரம் 05**

பி.அமுதினி (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி), சி.அனுக்குமார் (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்), தே.விதாரகி (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

**புதிய வாசிப்பு**

**தரம் 12**

ம.றோசி (கிளி/முருகானந்தா கல்லூரி), இ.யாழினி (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்), வி.சாருஜன் (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்)

**தரம் 13**

ந.கௌதிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), சு.சுதர்சினி (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்),

**தனிநடிப்பு**

**தரம் 10**

நா.சுலோஜினி (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), க.கஜன் (கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 11**

கருட்டாஸியஸ் மனோகரன் கமலேசன் (கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை), சி.நிக்சன் (கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசலை)

**கதைகூறல்**

**தரம் 06**

ஜெ.லன்சியா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), கீ.கணேசன் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), ச.சதுர்சிகன் (கிளி/முருகானந்தா கல்லூரி)

**தரம் 07**

ச.இசைவாணி (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), நி.கம்சிகன் (கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்) , ச.சுயரீதா (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 08**

க.அபிசிகா (கிளி/முருகானந்தா கல்லூரி), சு.ரவினா (கிளி/இராமநாதபுரம் மேற்கு), க.கோவிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), வ.அபிலஷா (கிளி/பளை மத்திய கல்லூரி)

**தரம் 09**

கே.தவரேகா (கிளி/பளை மத்திய கல்லூரி), பு.பிருகாசினி (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்)வி.நிம்சி (கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)

**உடன்தயாரித்து உரை நிகழ்த்துதல்**

**தரம் 12**

கி.லக்சனா (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), கு.பகிர்தா (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்)

**தரம் 13**

சா.பவித்திரா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), நி. நிருசிகா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சு.சுகன்யா (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்)

**பாத்திரமேற்று நடித்தல்**

**தரம் 06**

(கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 07**

(கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி), (கிளி/பூநகரி மகா வித்தியாலயம்)

**தரம் 08**

(கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 09**

(கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), (கிளி/பளை மத்திய கல்லூரி)

**தரம் 10**

(கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை), (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்)

**தரம் 11**

(கிளி/சென்.தெரேசா மகளிர் கல்லூரி)

**உரையாடல் நாடகம்**

**ஆரம்பப்பிரிவு**

**தரம் 3-5**

(கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்),

**கனிஷ்ட பிரிவு**

**தரம் 6-9**

(கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), (கிளி/முருகானந்தா கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

**தரம் 10-13**

(கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை)

**திறந்த போட்டி**

(கிளி/சென். திரேசா மகளிர் கல்லூரி)

**குழுப்பாடல்**

**ஆரம்பப்பிரிவு**

**தரம் 1-2**

(கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி, (கிளி/இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை), (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்)

**தரம் 3-5**

(கிளி/முழுங்காவில் மகா வித்தியாலயம்), (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்), (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி

**கனிஷ்ட பிரிவு**

**தரம் 6-9**

(கிளி/நாச்சிக்குடா அ.மு.ம.வி), (கிளி/ முருகானந்தா கல்லூரி), (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

**தரம் 10-13**

(கிளி/இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை), (கிளி/பரந்தன் இந்துக் கல்லூரி), (கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை)

(முற்றும்) (அ-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா.தலையீடு செய்யக்கூடாது



## பிரகடனத்தின் பகுதி 2 : 7 ஆம் சரத்தில் உண்டு என்கிறார் பாலித

(கொழும்பு)

**பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற முறைமையை அரசியல் நோக்கங்களுக்காக எவரும் பயன்படுத்தக்கூடாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புவியியல் காரணிகளின் அடிப்படையில் பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற ஆயுதத்தை பயன்படுத்திக் கொள்வதோ அல்லது தெரிவு அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதோ ஏற்றுக்கொள்ள முடியாது.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

நாடுகளின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு மிகவும் முக்கியமானது. நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தேவையின்றி தலையீடு செய்யக்கூடாது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் இரண்டாம் பகுதி ஏழாம் சரத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கோட்பாடானது அநேக சந்தர்ப்பங்களில் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் முனைப்புக்களுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் கோட்பாடு இரட்டை நிலைப்பாடுடையவையாக காணப்படுகின்றது என்றார். (அ-2)

# இணையத்தள வடிவமைப்பு போட்டித் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கணனிச்சங்கமும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்துகின்ற **இணையத்தளம் 2012** எனும் இணையத்தள வடிவமைப்பு போட்டிக்குரிய முடிவுத்திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக கணனிச்சங்க தலைவர் சோ.மயூரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிக்குரிய முடிவுத்திகதி நேற்றுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் பல மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாணவர்கள் தயாரித்த இணையத்தளத்தையும் அதற்குரிய தரவுத்தளத்தையும் இறுவெட்டுகளில் (CD) பதிவேற்றி **இணையத்தளம் 2012** வடிவமைப்புப் போட்டி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகு, மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் 30 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் இணைத்தளங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்படுகிறது. (அ-9)

# இலங்கைக்கான ஆறு தூதுவர்கள் ஜனாதிபதியை சந்தித்தனர்

ஆறு நாடுகளின் இலங்கைக்கான புதிய தூதுவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமக்கான நியமனப் பத்திரங்களைக் கையளித்தனர்.

ஜனாதிபதி செயலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விடேச நிகழ்வில் ஆறு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இரண்டு நாடுகளின் உயர்ஸ்தானிகர்களும் ஜனாதிபதியிடம் தமது நியமனப் பத்திரங்களை கையளித்தனர்.

அமெரிக்கா, பிரேசில், நோர்வே, ஹங்கேரி, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஜேர்மனிய புதிய தூதுவர்களே இவ்வாறு நியமனப்பத்திரங்களைக் கையாளித்தவர்களாவர். அத்துடன் நைஜீரியா மற்றும் சைப்பிரசின் உயர்ஸ்தானிகர்களும் தமது நியமனப் பத்திரங்களைக் கையளித்துள்ளனர்.

இதற்கிணங்க இலங்கைக்கான பிரேசில் தூதுவராக மார்செல்லோ லியனாடோ தசில்வாவும் ஹங்கேரி தூதுவராக ஜனோஸ் டெரனியும் நோர்வே தூதுவராக திருமதி கிரீடே லொச்சனும் அமெரிக்க தூதுவராக திருமதி மிச்சேல் ஜெனிசிசைனும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவராக அப்துல்ஹமீட் அப்துல் பதார் ஹாசீம் அல் முல்லாவும் ஜேர்மனிய தூதுவராக ஜேர்மன் மோர்ஹாப் எம் புதிய தூதுவர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

நைஜீரிய உயர்ஸ்தானிகராக யெமின் சென்சென் ரொமீமீனும் சைப்பிரஸ் உயர்ஸ்தானிகராக திருமதி மரியா இச்சாவியும் ஜனாதிபதியிடம் தமது நியமனக் கடிதங்களைக் கையளித்துள்ளனர். (அ-2)

# சுகாதார உத்தியோகத்தர் தரம் II" ஆ" பிரிவுக்குரிய திணைக்கள பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தரம் II "ஆ" பிரிவுக்குரிய திணைக்களப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிரதி பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவராணி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை சிறுப்பிட்டி ANC & WBC கிளினிக், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையிலும், மறுநாள் செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி கிழக்கு ANC & WBC கிளினிக், கைதடி PMCU இலும், 19 ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் PMCU, உரும்பிராய் PMCU இலும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை குளமங்கால் ANC & WBC கிளினிக், அளவெட்டி பிரதேச வைத்தியசாலையிலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (அ-9)


## கேள்வி அறிவித்தல்
## பிரதம செயலாளர் செயலகம் வட மாகாணம்

### 2012/2013 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவைக்கான ஒப்பந்தம்

1) பிரதம செயலாளர் பெறுகைக்குழுவினால் வடமாகாண சபையின் தலைமைக் காரியாலயங்களுக்கு 2012/2013 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவை (Security Service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2) பெறுகைதாரர் தனிநபராகவோ அல்லது நிறுவனமாகவோ பாதுகாப்புச் சேவையை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

3) பெறுகைதாரரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.நகரிலிருந்து 10 Km சுற்றுவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

4) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமிழ்மொழி மூலமான கேள்வி ஆவணங்களை எழுத்துமூலமான விண்ணப்பத்தின் பெயரில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000/- ஐ காசாகச் செலுத்தி 17/09/2012 தொடக்கம் 01/10/2012 வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை அலுவலக நாட்களில் மாகாணத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

5) கேள்வி ஆவணங்கள் 02/10/2012 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு "தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு, மாகாணத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அவர்களின் அறையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

6) கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

ர.விஜயலட்சுமி
தலைவர், பிரதம செயலாளர் கேள்விச் சபை,
187, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி/1057)


# கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை எமது போராட்டங்கள் தொடரும்

## கிழக்கு பல்கலை. ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கடந்த 74 நாட்களாக மேற்கொண்டு வரும் போராட்டங்கள் தமது கோரிக்கைகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் வரை தொடரும் என கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஜே.கெனடி தெரிவித்துள்ளார்.

ஐந்து கோரிக்கைகளில் மாணவர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளே அதிகம் என தெரிவித்த அவர் இது எமது போராட்டம் என்பதை விட கல்விச் சமூகத்தின் போராட்டமாக இதனை கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு சுபராஜ் விடுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த கலாநிதி கெனடி,

இலங்கையின் கல்விக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும். தேசிய கல்விக்கொள்கையை உடன் அமுல்படுத்த வேண்டும். பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது.

ஒரு கொள்கை மட்டத்திலான ஆவணத்திலான தீர்வினை விடவும் சம்மேளனத்தின் கோரிக்கைகளுக்கான உறுதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம் என்றார். (அ-2)

# யானை மோதியதில் ரயில் தடம் புரண்டது

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலுடன் யானை மோதியதில் குறித்த யானை பலியானதுடன் ரயிலும் தடம்புரண்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கெக்கிராவ நெல்லியகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதனால் திருகோணமலைக்கும் கொழும்புக்குமிடையிலான ரயில் சேவை பலுகஸ்வேவயுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த விபத்துச் சம்பவத்தில் பயணிகளுக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மக்கள் மீண்டும் அரசியல் அங்கீகாரத்தை த.தே.கூ இற்கே வழங்கியுள்ளனர்

கிழக்கு மகாணசபைக்கான தேர்தல் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது போலவே முடிவுகளைத் தந்துள்ளது. கிழக்கின் இனப்பரம்பல் காரண மாக யாருக்கும் தனித்து ஆட்சிய மைக்க முடியாத நிலையை ஏற்படுத் தும் என்ற கணிப்பு தப்பாகிப்போக வில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, 6,217 வாக்குகள் அதிக மாக பெற்றதன் மூலம் கிழக்கு மாகாண சபையில் மூன்று மேலதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இதன் காரணமாக 11 ஆசனங்களுடன் இரண்டாம் நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தள்ளப் பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தலில் 11 ஆசனங்களை எதிர் பார்த்தது. அதாவது திருகோண மலையில் 4 ஆசனங்கள் மட்டக் களப்பில் 5 ஆசனங்கள், அம்பாறை யில் 2 ஆசனங்களை தாம் எதிர்பார்ப் பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

அத்துடன் இரண்டு போனஸ் ஆசனங்களையும் அவர் எதிர்பார்த் திருந்தார். போனஸ் ஆசனங்களைப் பெறவேண்டுமானால், மாகாண அளவில் கூடுதல் வாக்குகளைப் பெறவேண்டியிருந்தது.

அது முடியாமல் போனது. எனினும் அவர்களின் 11 ஆசன ங்கள் என்ற குறி தப்ப வில்லை. திருகோண மலையில் எதிர்பார்த் ததைவிட ஒன்று குறை வாக-3 ஆசனங்கள் கிடைத்தபோதும் மட் டக்களப்பில் கிடைத்த ஆறு ஆசனங்கள் அத னைச் சமப்படுத்திக் கொண்டது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் தனித்து ஆட் சியமைக்கத் தேவை யான பெரும்பான்மை கிடைக்கும் என்று நம்பவும் இல்லை; எதிர்பார்க்கவும் இல்லை.

தமிழ் பேசும் மக்கள் ஒன்றி ணைந்து ஆட்சி அமைக்கலாம் என்றே கூறியது. அதாவது முஸ்லிம் காங்கிர சுடன் இணைந்து ஆட்சியமைப் பதிலேயே அதிக நம்பிக்கை கொண் டிருந்தது.

அதேவேளை தமிழ் மக்கள் அதிக ளவில் வாக்களித்தால் தனிப் பெரும் பான்மை கிடைக்க வாய்ப்புள்ளதை யும் சுட்டிக்காட்டியது. இந்தத்தேர்த லில், தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பிரதிபலிப்பு தெளிவாகவே உணர்த்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே பெரும்பான்மை யாக ஆதரித்துள்ளனர். முஸ்லிம்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை பெரும்பாலும் ஆதரித்துள்ளனர்.

அதேபோலவே சிங்களவர்களில் பெரும்பாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் ஐ.தே.க. வையும் ஆதரித்துள்ளனர்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, தேசிய காங்கிரஸ் போன்ற சிறுபான்மை கட்சிகளின் வாக்குகள் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் காப்பாற்றியுள்ளன.

இந்தத் தேர்தலில் அதிக ஆசனங் களை வென்றுள்ள போதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யால், அதைப்பெரிய வெற்றியாக்க கொண்டாட முடியாத நிலையே உள்ளது.

காரணம், அதன் வாக்குவங்கி கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் பெரும் சரிவைக் கண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்த லில் கிழக்கில் சுமார் 44 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால், இம்முறை வெறும் 30.59 வீத வாக்குகளையே பெற முடிந்துள்ளது.

வாக்குகள் என்ற கணக்கில் பார்த் தால், சுமார் 65 ஆயிரம் வாக்குகளை ஆளும்கட்சி இழந்துள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு சுமார் 20 ஆயிரம் வாக் குகளைப் பெற்ற சிவநேசதுரை சந்தி ரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இம்முறை ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது.



நாடாளுமன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிட்ட தேசிய சுதந்திர முன் னணி இம்முறை தனித்து போட்டியிட்டு 9522 வாக்குகளைப் பெற்றது.

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து பார்த்தாலும் கூட, கடந்த 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணிக்கு இம்முறை 64,411 வாக்குகள் குறைந்து போயுள்ளன.

அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், இந்தத் தேர்தலில் ஆசனங்களை குறைவாகப் பெற்றுள்ள போதிலும், அதிகளவு வாக்குகளைப் பெற்றுள் ளது.

அவர்களுக்கு இது ஒரு சாதகமான நிலை என்றே கூறலாம். கிழக்கின் சனத் தொகையில் சுமார் 40 வீதமே தமிழ் மக் கள். இவர்களில் வாக்களித்தவர் களில் கிட்டத்தட்ட 30.59 வீதத்தினரின் ஆதரவை அது பெற்றுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிழக்கில் 21.89 வீத வாக்குகளே கிடைத்தன. 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் மட்டக்களப்பை தன் கைக் குள் போட்டுக் கொண்டுவிட்டதாக கருதியிருந்த அரசாங்கத்துக்கு, இம் முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் அடியே வீழ்ந்துள்ளது எனலாம்.



ஏனென்றால், அங்கு இம்முறை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து போட்டியிட்டபோதும் வெறும் 2 ஆயிரம் வாக்குகளையே அதிகம் பெற முடிந்துள்ளது. அதே வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கு 38 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை மேலதிகமாகப் பெற் றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த முறை கிட்டத்தட்ட 43 வீத வாக் குகளுடன் முதலிடத்தைப் பிடித்த ஆளும் கட்சியால், இம்முறை, வெறும் 28.38 வீத வாக்குகளையே பெற முடிந்துள்ளது.

அம்பாறையிலும் அதே கதிதான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 52 வீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யால், 33.66 வீத வாக்குகளையே இம்முறை பெற முடிந்துள்ளது.

அதேவேளை, தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி 10.47 வீதத்தில் இருந்து 16.28 வீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெற்றிபெற்ற ஒரவரை அரசாங்கம் தன்கைக்குள் போட்டுக் கொண்டது.

ஆனால், அம்பாறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை அவரால் உடைக்க முடியவில்லை.

எனவே, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நிம்மதியாக இருக்க முடியாது.

வடக்கு தவிர்ந்த ஏனைய மாகா ணங்களில் உள்ளது போன்று சாதக மான நிலை உள்ளதாக கருத முடியாது.

அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசைப் பொறுத்தவரையில் கடந்த தேர்தலில் ஐ.தே.க.வுடன் கூட்டணி அமைத்ததைவிட அதிகமாக வாக்கு களை இம்முறை பெற்றுள்ளது.

அதேவேளை ஐ.தே.க. வுக்கும் கூட அதிக வாக்குகள்தான் கிடைத்துள்ளன. இந்தத் தேர்தலின் மூலம் கிழக் கிலுள்ள தமிழ் மக்களில் பெரும் பாலானோரால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட் டுள்ளது. அதாவது அம் பாறையில் 18.33 வீதம் தமிழர்களாக இருந்த போதும் வாக்களித்த வர்களில் 16.28 வீதத் தினர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை அங்கீ கரித்துள்ளனர்.

திருகோணமலையில் 28.75 வீதத்தினரே தமிழர்கள். ஆனால், வாக்களித்தவர்களில் 29 வீதமானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை ஆதரித்துள் ளனர்.

மட்டக்களப்பில் 74 வீதம் தமிழ ர்கள். இங்கு வாக்களித்தவர்களில் 51 வீதமானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அங்கீகாரம் அளித் துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு இது இன்னொரு ஆணையாக-அங்கீகாரமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் சார்பில் பேசுவதற் கான பலத்தை, கிழக்கு மக்கள் அவர் களுக்குக் கொடுத்துள்ளனர்.

ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புக் கிடைக்காது போனாலும் கூட, அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்வியாக கருதப்படாது. அவ்வாறு கருதுவதும் முட்டாள்தனம். ஏனென் றால் கிழக்கின் இனப்பரம்பல், அவ் வாறானது.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை எப்படியாவது தோற்க டித்து விடலாம் என்று அரசாங்கம் கணக்குப் போட்டிருந்தது. சுலபமான வெற்றியை அது எதிர்பார்த்தது.

ஆனால், கிழக்கு மக்கள் மீண் டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்துள்ளதன் மூலம், அரசாங் கத்துக்கு தெளிவானதொரு செய்தி யைக் கூறியுள்ளனர்.

இந்தத் தீர்ப்பின் உண்மையை, தாற்பரியத்தை அரசாங்கம் உணர்ந்து நடந்து கொண்டால் சரி.

கே. சஞ்சயன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்து தடம்புரண்டதில் 19 பேர் வைத்தியசாலையில்

(சிவநகர்)

தனியார் பேருந்து தடம் புரண்டதில் அதில் பயணித்த 19 பேர் படுகாயமடைந்து பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் பளைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவது, கைதடி மத்தி சனசமூக நிலையத்தில் இருந்து வலைஞர் மடம் நோக்கி 52 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தே பளைப் பகுதியில் தடம்புரண்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினரே காயமடைந்தவர்களை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வலைஞர் மடத்தில் உள்ள தமது உடைமைகளை பார்ப்பதற்காக இவர்கள் பயணித்ததாக தெரிய வருகின்றது. (அ-3-254)

# நீதிமன்றத்தால் அபராதம்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்தார்கள் என்ற காரணத்தினால் 7 பேர் மீது வவுனியா நகரசபை பொதுசுகாதார பரிசோதகர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வவுனியா நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டது என பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 7 பேர் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் 4 பேர் மாத்திரம் சமுகமளித்திருந்ததுடன் அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் அறவிடப்பட்டதுடன் ஏனைய மூவரும் சமுகமளிக்காத காரணத்தால் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா நகரசபை மற்றும் சுகாதார திணைக்களத்தினால் டெங்கு நோய் தொடர்பிலான விழிப்புணர்வு செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மக்களுக்கு வீடு வீடாக சென்று டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அகற்றுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் அவ்வாறான அறிவுறுத்தல்களை அசண்டையீனம் செய்பவர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்படுவதாகவும் தெரிவித்ததுடன் அண்மையில் 10 பேர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் அறவிடப்பட்டிருந்தது எனவும் தெரிவித்திருந்தார். (அ-9-266)

# அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற செயல்கள் வேதனை தருகின்றன

## மனோ கணேசன் கவலை

(கொழும்பு)

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிக்கு சிங்கப்பூரில் சிகிச்சையளிக்கப்படுகின்ற நிலையில் தமிழ் அரசியல்க் கைதிக்கு கொழும்பு பெரிய வைத்தியசாலையில் கூட பூரண சிகிச்சையளிக்க தயங்குவதுடன் மேலும் வசதிகள் குறைந்த மகசின் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை மிகக் கொடூரமான செயல் என தெரிவித்ததுடன் இவருக்கு வைத்திய காரணங்களுக்காக பிணை வழங்கப்படுமிடத்து இவருக்கு வெளியில் சிகிச்சை செய்ய பலதொண்டு நிறுவனங்களும் மக்களும் காத்திருக்கின்றார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதி சுந்தரம் சதீசின் தற்போதைய நிலைமையை விளக்கி கொழும்பிலுள்ள ஜனநாயக மக்கள் முன்னணி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

நிமலரூபன், டெல்றொக்சன்பாணியில்சதீஸ் குமாரின் நிலையும் ஏற்பட அரசு பகீரத பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறது. வைத்தியசாலையில் கிசிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொழுது பூரண சுகம் பெறாத நிலையில் மனைவிக்குக் கூட தெரியாமல் கொழும்பு பெரிய வைத்தியசாலையில் இருந்து வசதிகளற்ற மகசின் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை எவ்விதத்திலும் நியாயப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாது.

மகசின் சிறைச்சாலையில் கூட மனைவியை அருகில் சென்று பேசுவதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியதும் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததொன்றாகும். பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ள சதீசுக்கும் குறைந்தபட்சம் மருத்துவக் காரணங்களுக்காக பிணை வழங்குவது கூட அரசு ஆவன செய்யாமை மிகவும் வேதனையானதும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும் என்றார்.

இதேவேளை, இறுதியாக சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்களுடன் தொடர்பு கொண்டு மருத்துவக் காரணங்களைக் காட்டி தமிழ் அரசியல் கைதி சுந்தரம் சதீசை பிணையில் எடுப்பதற்கு ஆவன செய்ய மக்கள் கண்காணிப்புக்குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா, கைதி சுந்தரம் சதீசின் மனைவி கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறைப் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை கெனடி வீதி, சேமக்காலை வீதியிலும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நாவலர் வீதி, முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத்தெருவிலும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நாவலர் வீதி, நாவாந்துறை தபாற்கந்தோர் அருகிலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

# விசேட தேவையுடையோர் சங்கத்திற்கு யு.என்.எச்.சி.ஆர் இன் உதவிகள்

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விசேட தேவையுடைய சங்கத்திற்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் பல்வேறு உதவித் திட்டங்களையும் வழங்கி வருவதாக வவுனியா சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செட்டிகுள பிரதேசசெயலகத்தில் கிராம மட்டத்தில் பல்வேறு விசேட தேவையுடையோர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கான உதவித்திட்டங்கள் சமூகசேவைகள் திணைக்களத்தின் ஊடாக பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் ஆண்டியாபுளியங்குளம், அல் அக்சா விசேடதேவையுடையோர் சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகின்றமையால் இந் நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுக்கு சர்வதேச தொழிலாளர் நிறுவனம், ஹண்டி கப் இன்டர்நஸனல் நிறுவனம், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனங்களின் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தில் இடம்பெற்ற இச்செயற்றிட்ட ஆரம்ப நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத்தகடுகள், கதிரைகள், மேசைகள், சமையல் பாத்திரங்கள் என்பவற்றை வழங்கி சங்கத்தை வலுவூட்டி உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக செட்டிகுள பிரதேச செயலாளர் நா.கமலதாசன் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி றீகா, சமூக சேவை உத்தியோகத்தர் செ. ஸ்ரீனிவாசன், சேவாலங்கா நிறுவன உத்தியோகத்தர்கள் திருமதி மேனகா, திருமதி விஜயா, கிராம சேவை உத்தியோகத்தர் பா.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-9-266)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications will be received by me up to 28th September, 2012 from suitably qualified candidates for the following posts:

**NOTE: Applicants who have already applied for the post of Full Time Sub-warden in response to our advertisement dated 02/04/2012 need not apply again.**

**POST- FULL TIME SUB- WARDEN GRADE II (MALE) [U-MN 3 (III)]**

**QUALIFICATIONS:**

A graduate of a recognized University.

Preference will be given to those with experience in administration and management of hostal and to those who have experience in handling the matters related to welfare and discipline of the Students.

**NOTE**: The Successful applicant should reside in the hostel. But, he/she cannot reside with his/ her family.

The successful candidate should pay a refundable security deposit of Rs.10,000/= this amount shall be deducted from his/ her salary in 10 installments.

Salary Scale: Rs.22,240-18x320-28,000 p.m

Selection: By Test and Interview

**Age not more than 45 years.**

STATUTOARY BENEFITS

1. Allowance approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payments.
4. Employment Trust Fund
5. Free medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order drawn in favour of the Bursar, University of Jaffna. together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10cm. in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the registrar on or before 28th september 2012

only application sent on specified form will be accepted application received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

Applicants from government Departments/State Corporations and Statuary Bodies Should Apply through their Head of the Department. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date will be rejected without intimation.

*REGISTRAR*
*2012.09.12*

(C-1060)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறைவனை அடையும் வழி!

வெகுகாலத்திற்கு முன்பு ஒரு சிற்றூரில் வேதியன் ஒருவன் இருந்தான். மிகுந்த பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டவன். ஏழை என்றாலும் பொருளாசை அவனிடம் கிடையாது. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவன். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த அந்த வேதியன் தன்னால் இயன்றளவு எளியவர்களுக்கு உதவி புரிந்தான். துறவிகளுக்குத் தொண்டு செய்தான். அதனால் வரவுக்கேற்ற செலவும் அவனுக்கிருந்தது.

ஆனால் வேதியனின் மனைவியோ அவனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவளாக இருந்தாள். அவளுக்குப் பேராசை மிக அதிகம். சுயநலவாதி. சுகபோகமாக வாழவேண்டும் என்று நினைப்பவள். தனது ஆடம்பரச் செலவுகளுக்கு தேவையான பணம் இல்லாததால் எப்படியேனும் அதிக பணம் சம்பாதிக்கும்படி கணவனை வலியுறுத்தி வந்தாள்.


வேதியன் நல்ல பண்புகளையும் செயல்களையும் எடுத்துக்கூறியும் அதனை அவள் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் கூறி தொல்லை கொடுத்து வந்தாள். இதனால் வேதியன் நரக வேதனையடைந்தான்.

ஒருசமயம் வேதியன் வாழ்ந்த சிற்றூருக்கு ஒரு துறவி வந்தார். அவரிடம் அற்புதங்கள் படைக்கும் பல சித்திகள் இருப்பதாக செய்தி பரவியது.

இதனை அறிந்த வேதியனின் மனைவி, நமது ஊருக்கு வந்துள்ள துறவி பெரிய மகானாம். அவரிடம் பற்பல யோக சக்திகள் உள்ளனவாம். அவர் நினைத்தால் எதுவும் நடக்குமாம். நீங்கள் அவரிடம் சென்று நமது வறுமை நீங்க, செல்வம் கொழிக்க ஏதாவது செய்யும்படி கேளுங்கள் என்று வலியுறுத்தினாள்.

ஒரு சாதுவிடம் சென்று அறிவு, ஆற்றல், பக்தி போன்ற தெய்விகப் பண்புகளைப் பெற ஆசீர்வதிக்கும்படி கேட்கலாம். அவரிடம் பணம் கிடைக்க வழி கேட்பது முறையல்ல என்று வேதியன் எவ்வளவோ எடுத்துக் கூறினான்.

அதையெல்லாம் வேதியன் மனைவி காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.பண வெறி பிடித்த அவள் சாதுவிடம் சென்று நான் சொன்னதை அப்



படியே கேளுங்கள் என்று வேதியனை விரட்டினாள். வேறு வழியில்லாத அவன் மனைவியை அமைதிப்படுத்த தன்மானத்தைத் தூக்கி எறிந்துவிட்டு வேண்டா வெறுப்புடன் சாதுவின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

சாதுவின் முன்னிலையில் அமைதியாக அமர்ந்தான். மனைவி கூறியவற்றை சாதுவிடம் கூற மிகவும் கூச்சப்பட்டான். மிகுந்த தயக்கத்துடன் நீண்டநேரம் அங்கேயே அமர்ந்து இருந்தான். நீண்டநேரமாக அமைதிகாக்கும் வேதியனை கவனித்த சாதுவே பேச ஆரம்பித்தார்.

அன்பனே! நீ மனதில் எதையோ வைத்துக்கொண்டு கூறமுடியாமல் குழப்பத்துடன் உள்ளாய். எதுவென்றாலும் தயங்காமல் கேள் என்றார்.

வேதியன் கூற ஆரம்பித்தான். சுவாமி தாங்கள் மிகுந்த யோக சக்தி படைத்தவர் என்றும் அதன்மூலம் பல அற்புதங்கள் நிகழ்த்துகிறீர்கள் என்றும் எனது மனைவி தெரிவித்தாள். நாங்கள் மிகவும் ஏழைகள். தொட்ட தெல்லாம் தங்கமாகும். மாயக்கல் கிடைத்தால் எங்கள் வறுமை நீங்கி செல்வம் கொழிக்கும் என்று என் மனைவி நினைக்கிறாள். அவளது வற்புறுத்தலால்தான் அந்த மாயக்கல்லைப் பெற இங்கு வந்தேன் என்று மிகுந்த வெட்கத்துடன் கூறினான்.

உடனே சாது ஓ... இதுதான் விஷயமா? நீ கூறுவதைப் போன்ற மாயக்கல் என்னிடம் இருந்தது. அதனை நேற்றுத்தான் தெருக்கோடியில் உள்ள சாக்கடையில் வீசி எறிந்து விட்டேன். நீ வேண்டுமானால் அங்கு சென்று தேடி எடுத்துக் கொள்ளலாம் என்று சர்வ சாதாரணமாகக் கூறினார்.

வேதியன் சாது குறிப்பிட்ட



சாக்கடைக்குச் சென்றான். சிறிதுநேரம் அங்குமிங்கும் தேடினான். முக்கோண வடிவமான ஒளி பொருந்திய கல் ஒன்று அவன் கைக்குக் கிடைத்தது. அதுதான் சாது குறிப்பிட்ட கல் என்று புரிந்து கொண்டான். அந்த மாயக் கல்லினால் அருகிலிருந்த ஒரு சிறிய கல்லைத் தொட்டான். உடனே அது தங்கமாக மாறியது.

அந்த மாயக்கல்லுடன் வேதியன் மகானின் முன்பாகச் சென்று அமர்ந்தான். அவரிடம் சுவாமி தொட்டதெல்லாம் பொன்னாக மாறக்கூடிய அதிசயக் கல்லையே மிகவும் அற்பமாக நினைத்து சாக்கடையில் வீசி எறிந்திருப்பதால் இதைக் காட்டிலும் அற்புதமான மேலான பொருள் உங்களிடம் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனை தாங்கள் எனக்கு அளிக்கலாமா? என்று கேட்டான்.

உடனே சாது வேதியனிடம் அப்பனே! நீ நினைப்பது உண்மைதான். இந்த மாயக்கல்லை விட பல்லாயிரம் மடங்கு மேலான **ஆண்டவனின் திருநாமம்** என்ற ஒரு பொருள் என்னிடம் உள்ளது. அதனை மிகுந்த மனநிறைவுடன் உனக்குத் தர விருப்பமுடன் உள்ளேன். ஆனால் அதனைப் பெறுவதற்கான மனப்பக்குவத்தை உனது மனைவி இன்னும் அடையவில்லை. அவள் பேராசை பிடித்தவளாக இருக்கிறாள். அவளிடம் இந்த மாயக்கல்லைக் கொடுத்து விட்டு நீ இங்கே வரலாம். இந்த மாயக்கல்லை விட எல்லா விதத்திலும் உயர்ந்த இறைவனின் திருநாமத்தை உனக்கு மகிழ்ச்சியுடன் அளிக்கிறேன் என்று தெரிவித்தார்.

வேதியன் துறவி கூறியபடியே மாயக்கல்லை தனது மனைவியிடம் கொடுத்துவிட்டு மனைவி, மக்கள், வீடு, சொந்தம் அனைத்தையும் துறந்தவனாக மீண்டும் சாதுவிடமே திரும்பிவந்தான். அனைத்தையும் துறந்துவந்த அந்த உத்தமனுக்கு எல்லாச் செல்வங்களிலும் மேலான ஆண்டவனின் திருநாமம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை சாது விளக்கமாக எடுத்துரைத்தார். பின்னர் வேதியனுக்கு ஆண்டவரின் திருநாமத்தை சாது தந்தருளினார்.

வேதியன் சாதுவிடமிருந்து பெற்ற திருநாமத்தை சர்வகாலமும் மிகுந்த ஆர்வமுடன் ஜெபித்து வந்தான். அதன் காரணமாக அவனுக்கு ஆண்டவனின் தரிசனம் கிடைத்தது. பிறவிச் சூழலிலிருந்து முற்றிலும் விடுபட்டான். கடலில் கலக்கும் நதிபோல இறைவனிடம் முக்தி நிலையைப் பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் 2030 ஆம் ஆண்டுக்குள் அணுஉலைகளை மூட உத்தரவு

கடந்தாண்டு ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமா அணு உலை சேதமடைந்ததை தொடர்ந்து எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து அணுஉலைகளையும் மூடி விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் சுனாமியால் புகுஷிமா அணு மின் நிலையம் சேதமடைந்தது. இதனையடுத்து இந்நிலையத்தை சீரமைத்து மீண்டும் மின் உற்பத்தியை தொடங்க ஜப்பான் அரசு திட்டமிட்டது. ஆனால், இதற்கு எதிர்க்கட்சிகளும் அணுசக்தி எதிர்ப்பாளர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மேலும் அங்கு அணு உலைக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் அடைந்து வருகிறன்றன.

அத்துடன் 40 ஆண்டுக்கு மேல் செயற்படும் அணு மின் நிலையங்களை கைவிட வேண்டும் என்றும் அவற்றை மூடுவதால் ஏற்படும் இழப்பில் 30 சதவிகித மின்சாரத்தை மாற்று திட்டத்தின் மூலம் பெற வழி காணலாம் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் பிரதமர் யோஷிஹிகோ நோடா தலைமையில் அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் அணுமின் நிலையங்களை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் மூடுவது என்று முடிவு செய்யப்பட்டது. ஜப்பானில் அணுமின் நிலையங்கள் மூலமே பெரும்பகுதி மின் உற்பத்தி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமெ.தூதரக தாக்குதலின் பின்னணியில் அல்கொய்தா

## விசாரணைக்கு உத்தரவு

லிபியாவில் அமெரிக்க தூதுரகத்தை குறி வைத்து தாக்குதல் நடத்தியது அல்கொய்தா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைக்கு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து 50 கமாண்டோக்களுடன் 2 அமெரிக்க போர்க் கப்பல்கள் லிபியா கடற்பகுதிக்கு அனுப்பப்பட்டன. இதற்கிடையில் லிபியாவில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டதன் பின்னணியில் அல் கொய்தா இயக்கம் இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்த எப்.பி.ஐ. உள்ளிட்ட ஏஜென்சிகளுக்கு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.(அ-2)

# எண்ணெய் தாங்கி வாகனத்துடன் மோதியதில் 56 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் பயணிகள் பேருந்து எண்ணெய் தாங்கி வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 51 பேர் பலியானதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கான்ஸி மாகாணத்திலுள்ள அப்பான்ட் மாவட்டத்தில் காபூல் கந்தஹாருக்கான நெடுஞ்சாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்து நடந்த சிறிது நேரத்தில் பேருந்தும் எண்ணெய் தாங்கி வாகனமும் தீப்பற்றி எரிந்துள்ளன.

இதில் பேருந்தில் 56 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் வாகனங்களிலிருந்து எரிந்து கருகிய சடலங்களை மீட்கும் பணியில் ஆப்கான் பொலிஸாரும் படைவீரர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பலரது சடலங்கள் அடையாளங் காண முடியாத வகையில் எரிந்து கருகியுள்ளதாக மாகாண தலைமை அதிகாரி ஜெனரல் ஸரவார் ஸாஹித் தெரிவித்தார். (அ-2)

# உத்தர மாநிலத்தில் கனமழை; நிலச்சரிவில் சிக்கி 45 பேர் பலி

உத்தர பிரதேசம் மற்றும் உத்தர காண்ட் மாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 45 பேர் பலியாகியுள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட விபத்து மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 12 பேர் பலியாகியுள்ளனர். அலகாபாத்தில் 66.8 மி.மி. மழையும் வாரணாசியில் 43.3 மி.மி. மழையும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, உத்தரகாண்ட் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவில் 35 பேர் மாயமாகியுள்ளனர். மேலும் 33 பேர் பலியாகியுள்ளனர்.

மாநிலத்தில் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் மட்டுமே மிக அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 35 பேரில் மாயமானவர்களில் 29 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக நிவாரண பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இராணுவத்தினர் மற்றும் இந்திய, திபெத்திய எல்லை பாதுகாப்பு படை பொலிஸாரும் மீட்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.(அ-2)

# அரசியலில் சேரமாட்டேன்; பிரியங்கா உறுதி

நேரு குடும்பத்தின் வாரிசும் சோனியாகாந்தியின் மகளுமான பிரியங்காகாந்தி அரசியலில் சேரமாட்டேன் என உறுதியாக கூறியுள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த உத்தர பிரதேச சட்டசபை தேர்தலில் ரேபரேலி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள 5 சட்டசபை தொகுதிகளிலும் காங்கிரஸ் தோற்றது அக்கட்சிக்கு அதிர்ச்சியை கொடுத்தது.


இந்நிலையில் சமீபகாலமாக அவரது மகள் பிரியங்கா, தனது தாயாரின் ரேபரேலி தொகுதி மீது அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

இதேபோன்று அமேதி தொகுதி தொண்டர்களுடனும் அவர் அடிக்கடி கலந்துரையாடி வருகிறார். இதனால் பிரியங்கா தீவிர அரசியலில் ஈடுபடுவார் என்றும் பாராளுமன்ற தேர்தலில் அவர் ரேபரேலி தொகுதியில் போட்டியிடுவார் என்றும் தகவல்கள் வெளியாகின.

ஆனால், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பிரியங்கா பேட்டி அளித்தபோது நான் அரசியலில் சேரமாட்டேன். நான் அரசியலில் குதிக்காமல்தான் கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரையிலும் என் தாயார் தொகுதியை கவனித்துக் கொண்டது போல இப்போதும் கவனித்து கொண்டிருக்கின்றேன் என்றார். (அ-2)

# கௌதமாலாவில் எரிமலை வெடிப்புக்குள்ளாகும் அபாயம்

## ஒரு இலட்சம் மக்கள் வெளியேற்றம்



வட அமெரிக்காவில் உள்ள கௌதமாலா நாட்டில் பியூகோ என்ற இடத்தில் மிகப்பெரிய எரிமலையானது வெடித்து சிதறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது அதிலிருந்து பயங்கர சத்தம் எழும்புவதோடு அதிலிருந்து சாம்பலும் புகையும் வெளியாகிறது.

எனவே, அது எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது நெருப்பு குழம்புடன் பாறைகள் தூக்கி வீசப்படும். இது சுமார் ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு எழும்பும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, பியூகோ எரிமலையாக சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கௌதமாலா ஜனாதிபதி ஒட்டோ பெரீஷ் மொலினா தெரிவித்துள்ளார். (அ-2)

# டகோடா பல்கலையில் குண்டுப்புரளி; 15 ஆயிரம் மாணவர்கள் வெளியேற்றம்

(டெக்சாஸ்)

அமெரிக்காவில் உள்ள ஆஸ்டின் நகரில் டெக்சான் பல்கலைக் கழகம் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் காலை 8.35 மணியளவில் ஒரு மர்ம தொலைபேசி வந்தது. அதில் பேசியவன் கூறியதாவது, நான் ஒரு அல்கொய்தா தீவிரவாதி என்றும் பல்கலைக்கழக வளாகத்தில் வெடிகுண்டு வைத்ததாகவும் கூறினான். இன்னும் 90 நிமிடத்தில் அந்த குண்டு வெடிக்கும் என்றும் மிரட்டல் விடுத்தான். இதனால் பரபரப்பு அடைந்த பல்கலைக்கழக நிர்வாகம் அங்கிருந்த 50 ஆயிரம் மாணவர்களையும் வெளியேற்றியது.

பல்கலைக்கழகத்தில் வகுப்புகளுக்கு விடுமுறை அறிவித்து வளாகத்தில் உள்ள அனைத்து கட்டடங்களில் வெடிகுண்டு நிபுணர்கள் மூலம் சோதனை நடத்தியது. ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. இதே போன்று பார்கோ நகரில் உள்ள வடக்கு டகோடா பல்கலைக்கழகத்துக்கும் தொலைபேசி மிரட்டல் வந்தது. இதை தொடர்ந்து அங்கிருந்து 15 ஆயிரம் மாணவர்களை வெளியேற்றிவிட்டு சோதனை நடத்தப்பட்டது. அங்கும் வெடிகுண்டு எதுவும் கிடைக்கவில்லை.

எனவே அவை வெறும் புரளி என தெரியவந்தது. வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக டெக்காஸ் மற்றும் வடக்கு டகோடா பல்கலைக் கழக பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அபாய சைரன் ஒலிக்கப்பட்டது. மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டனர். (அ-2)



அரசு முறை சுற்றுலாவாக மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இளசரவர் வில்லியம்ஸ் மற்றும் இளவரசி கேத் மிடில்டன் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள அஸாயகிரின் பள்ளிவாசலுக்குச் சென்றனர். பிரித்தானியாவின் முன்னாள் இளவரசி டயானா பள்ளிவாசல்களுக்கு விஜயமளித்த நீண்ட வருடங்களுக்குப் பின்பு இளவரசி கேத் மிடில்டனும் அவரைப்போன்றே விஜயமளித்துள்ளதைப் படத்தில் காணலாம்.

# ஜெட்போர் விமானங்களை இந்திய விமானப்படை வாங்கியது

இந்திய விமானப்படை 20 அதிநவீன ஜெட் போர் விமானங்களை பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ் (பி.ஏ.இ சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது. இந்திய விமானப்படைக்காக பிரித்தானியாவை சேர்ந்த பி.ஏ.இ. சிஸ்டம்ஸ் நிறுவனத்திடமிருந்து 66 அதிநவீன ஜெட் விமானங்களை வாங்க கடந்த 2004 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

20 அதிநவீன ஜெட் போர் விமானங்களை வாங்குவதற்கு மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தலைமையிலான இராணுவ கொள்முதல்குழு கடந்த ஆண்டு நவம்பரில் ஒப்புதல் அளித்தது.

இவை விமானப்படையின் சூரியகிரண் பிரிவுக்காக வாங்கப்படவுள்ளன. ஜெட் விமான கொள்முதல் திட்டத்தின் மதிப்பு ரூ 20 கோடிக்கும் அதிகம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MMBL
**Money Master**
Company Registration No.P.V 986

வவுனியா, புதுக்குடியிருப்பைத் தொடர்ந்து

# கிளிநொச்சியிலும்

WESTERN UNION

சிறப்பான சேவையாற்றிக் கொண்டிருக்கிறது கோபி ஏஜென்சி.

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்


வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்

## வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது! கிளிநொச்சி மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!

நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

# கோபி ஏஜென்சி

இல.355, A 9 வீதி, கிளிநொச்சி. (கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமை)










- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்றம் சேவையினை வழுங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்.
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்.
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:-021 2283999, Fax 0212283998**

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**கோபி ஏஜென்சி**

**தலைமைக்காரியாலயம்**
33,மில் வீதி, வவுனியா
024 2225888/024 2222411

**கிளைக்காரியாலயம்**
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி,
புதுக்குடியிருப்பு
0243248979, 0777343300

WESTERN UNION

(சி/1061)

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி ட்ரான்ஸ்பர் பிறைவேட் லிமிட்டட் 7 ஆம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II இல.315,வொக்சோல் வீதி,கொழும்பு 02. தொலைபேசி அழைப்பிற்கு-0115529999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயிப்பது எப்படியென்று யோசிப்பதை விட;
தோற்றது எப்படியென்று யோசித்துப் பார்.
நீ ஜெயித்து விடுவாய் ~ஹிட்லர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பசி தீர்த்த ப.நோ.கூ. சங்கங்கள் படும் அவலம் காணீரோ!

ஒரு காலத்தில் ‘கூட்டுறவே நாட்டுயர்வு’ என்ற மகுட வாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிய பணிகள், படைத்த சாதனைகள் அளப்பரியன.

தனியார் வர்த்தக நிறுவனங்கள் போட்டி போட முடியாத அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் எங்கள் மண்ணில் ஓங்கி–உயர்ந்து நின்ற உண்மைகள் மறுப்பதற்குரியவையல்ல.

கூட்டுறவுச் சங்கத்தில் குறைந்த விலையில், தரமான பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்ற உறுதிப்பாடு சங்கங்கள் மீதான நம்பிக்கைத் தன்மையை மக்கள் மத்தியில் வலுப்படுத்தியிருந்தது.

இதனால் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை நாடினர்.

சங்கங்களும் மக்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் விற்பனை செய்கின்ற பணியை மேற்கொண்டதால், பட்டிதொட்டியெங்கும் சங்கக் கடைகள் கிளை பரப்பி கூட்டுறவின் பலத்தை பறைசாற்றி நின்றன.

கூட்டுறவாளர்கள் தங்கள் குடும்பப் பணியையும் மறந்து சங்கங்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தனர்.

அவர்களின் அர்ப்பணிப்பால் விருட்சங்களாக கிளை பரப்பி விழுதுவிட்ட ப.நோ.சங்கங்கள் போர்க் காலச் சூழ்நிலையில் பல்வேறு அனர்த்தங்களை சந்தித்தபோதும், தட்டுப் பாடான பொருட்களை மக்களுக்கு பங்கிட்டு வழங்குவதில் அவை ஆற்றிய பணியை வரலாறு ஒருபோதும் மறந்துவிடாது.

கூட்டுறவுப் பணியாளர்கள் குறைந்த ஊதியத்தின் மத்தியிலும் மக்களுக்கான உணவு விநியோகத்தில் காட்டிய கரிசனை அவர்களின் உழைப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

என்ன செய்வது! ஆயுதக் கலாசாரத்தின் விளைவாக கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைகள் இயக்கங்களின் ஆதரவு மையமாக மாறின.

சங்கங்களின்தேட்டங்கள்அள்ளி எடுக்கப்பட்டன.

கொடி பிடித்தலுக்கும் கொண்டாட்டத்திற்கும் கூட்டங்களுக்கும் ஆட்சேர்க்கும் இடங்களாக ப.நோ.கூ. சங்கங்கள் மாற்றப்பட்டன.

அதன் விளைவு இன்று ப.நோ.கூ. சங்கங்கள் வறுமையில் வாடுகின்றன.

மக்கள் கூட்டத்திற்கு குறைவே இல்லையென்று கூறப்பட்ட சங்கக்கடைகளை இன்று யாருமே திரும்பிப் பார்ப்பதில்லை.

இங்கு பணியாற்றுபவர்கள் ஊதியம் பெற முடியாதவர்களாக வேதனையில் வாடுகின்றனர்.

ஓ! நல்லாக இருந்த ஒரு மனிதன் நொந்து கெட்டு நூலாகிப் போனால் எப்படியிருக்குமோ அதுபோலாகிவிட்ட ப.நோ.கூ. சங்கங்களை மீள்கட்டுமானம் செய்வது யார்? பதில் தெரியாத கேள்வியோடு ‘கூட்டுறவு’ உடைபட்டுப் போகும் துயரத்தை யார் துடைப்பார்?

# பிரதேச அபிவிருத்திக்கு வரலாற்று நூல்களே அதிகம் பங்களிக்கின்றன

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதேச அபிவிருத்திக்கு வரலாற்று நூல்கள் அதிகளவில் பங்களிப்பைச் செய்கின்றன என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

வேலணை ஒரு வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவிக்கையில்,

ஒரு பிரதேசத்தின் வரலாற்றினை, அதன் சிறப்பினை எடுத்துக்கூறும் வகையில் எழுதப்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பல நூல்கள், ஆக்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றபோதும் இவ்வாறான வரலாற்று நூல்கள் வெளிவருவது மிகவும் குறைவு.

ஒரு பிரதேசம் தொடர்பாக அங்குள்ள வளங்கள், மக்களின் வாழ்வியல் முறைமை போன்றவற்றினை வெளிக்காட்டும் வகையில் வரலாற்று நூல்கள் வெளிவரும்போது அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு எங்களைப் போன்ற உத்தியோகத்தர்களுக்கு மிகவும் இலகுவாக இருக்கும்.

நாம் பிறந்த மண்ணுக்காக இவ்வாறான படைப்புக்களை எமது சமுதாய நலன் கருதி படைக்க வரலாற்று ஆய்வாளர்களும் படைப்பாளர்களும் முன்வரவேண்டும்.

எமது வரலாறு மறுக்கவும் மறைக்கவும் முடியாத ஒன்று. அந்த வரலாறுகளை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் படைப்புக்கள் அமைய வேண்டும்.

எனவே நிர்வாக இயந்திரத்தில் ஒரு பிரதேசத்தின் தகவல்களை முழுமையாக பெற்றுக்கொள்வது கடினமானது. தகவல்கள் சரியாக இருந்தால் அபிவிருத்திப் பணிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

அத்தோடு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் திரும்பிவரும்போது எமது பிரதேசங்களின் வரலாறுகளை இலகுவாக அறிந்துகொள்ள இவ்வாறான வரலாற்று நூல்கள் அதிகளவில் உதவுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ–6)

## இந்தியாவிலிருந்து இறக்குமதியான கொள்கலனில் கதிர்வீச்சு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்திப் பொருட்கள் கொண்ட கொள்கலனில் செயற்கை கதிர்வீச்சு பதார்த்தங்கள் இருப்பது கொழும்பு துறைமுகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை அணு சக்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

125 தொகுதி துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்தி பொருட்கள் கொண்ட இக்கொள்கலனில் கோபால்–60 எனும் மிக ஆபத் தான செயற்கைக் கதிர்வீச்சு பதார்த்தம் காணப்பட்டதாக இலங்கை அணுசக்தி அதிகாரசபையின்தலைவர்கலாநிதி ஆர். எல்.விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சபையின் கதிர்வீச்சு பாதுகாப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்பின் இப்பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதை நிறுத்திவைப்பதற்கு தீர்மானித்ததாக அவர் கூறினார். (அ–9)

## மாதாந்த கருத்தரங்கு


யாழ்.இலக்கிய குவியத்தின் மாதாந்த கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணியளவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஈ–சொப்ற் கணனி கற்கைகள் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயனடையுமாறு மன்றத் தலைவர் க.சோதிதாசன் கேட்டுள்ளார். (ந–8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் வளநாடு

ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடே
அம்பரம்போ லேநிறைந்த நாடெங்கள் நாடே
தீதிலருட் கடல்சூழ்ந்த நாடெங்கள் நாடே
திக்கெட்டும் பெருகிவளர் நாடெங்கள் நாடே
சோதிமய மானவுயர் நாடெங்கள் நாடே
சுருதியெல்லாம் ஓலமிடும் நாடெங்கள் நாடே
ஓதாம லோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்
ஒண்கழல்கள் காட்டிவைத்த தெங்கள்வள நாடே



# நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்

## பரமபிதா காட்டிய பாதை


நான் யார்? இந்தக் கேள்வியைச் சிந்திக்காதவர்களே இல்லை எனலாம். இன்று நம்மில் பலருக்கு இது எப்போதும் எழும் ஒரு கேள்வியாக இருக்கலாம். ஆனால் அறிஞர்களும் ஞானிகளும் நான் யார்? என்ற தேடலில் வாழ்க்கை முழுவதும் ஈடுபட்டுள்ளனர். நான் யார் என்ற இந்தக் கேள்விகளுக்குள் பல கேள்விகள் உள்ளன. என் குடும்பத்தினருக்கு நான் யார்? என் நண்பருக்கு நான் யார்? என் பணியிடத்தில் நான்யார்? நான் வாழும் சமுதாயத்தில் நான் யார்? இவர்களுக்கெல்லாம் நான் என்னவாகத் தெரிகிறேன்? அடிப்படையில் மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? என்பது இன்று நம் வாழ்வின் ஒரு முக்கிய கேள்வியாகிறது.

இயேசு மக்களும் சீடர்களும் தம்மை யார் என்று கூறுகிறார்கள் என்னும் கேள்வியைக் கேட்கிறார். இயேசுவின் இந்தத் தேடலை இன்றைய நற்செய்தி நமக்குத் தருகின்றது. இன்றைய நற்செய்தியில் இயேசுவின் இந்த இரு கேள்விகளை நாம் கவனிப்போம். நான் யார் என்று மக்கள் சொல்கிறார்கள்? நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?

21 நூற்றாண்டுகளாய் மனித வரலாற்றில் அதிகமான, ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியவர்களைக் குறித்து கருத்துக் கணிப்புக்கள் பல நடந்துள்ளன. ஏறக்குறைய எல்லாக் கருத்துக் கணிப்புகளிலும் இயேசுவின் பெயர் முதலிடம் ... இடங்களில் ஒன்றாக இருந்துள்ளது. மனித வரலாற்றை இத்தனை நீண்டகாலம், ஈராயிரம் ஆண்டுகள் ஆழமாகப் பாதித்துள்ளவர்கள் ஒரு சிலரே. மக்கள் இயேசுவைப் பற்றி என்ன சொல்கிறார்கள்.? என்று நோக்கினால் என்னென்னவோ சொல்லி விட்டார்கள். இன்னும் சொல்லி வருகிறார்கள். நல்லதும் பொல்லாததும். உண்மையும் பொய்யும். விசுவாசச் சத்தியங்களும் கற்பனைக் கதைகளும். ஓர் இறைவாக்கினர் எனவும் அளவுக்கதிகமாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் இவ்வளவு சொல்லியும் இயேசுவைப் பற்றி முழுமையாக நம் மனிதகுலம் சொல்லி விட்டதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்? இந்தக்கேள்வி நமக்குத்தான் தரப்படுகின்றது. ஆனால் இந்த இரண்டாவது கேள்விக்கு அப்படி எளிதாகப் பதில் சொல்லிவிடமுடியாது.

நாம் படித்தவைகளை விட, பட்டுணர்ந்தவைகளே இந்தக் கேள்விக்குப் பதிலாக வேண்டும். நாம் மனப்பாடம் செய்தவைகளை விட மனதார நம்புகிறவைகளே இந்தக் கேள்விக்கான பதிலைத் தரமுடியும். இந்தக்கேள்வி நம்மில் பலருக்கு சங்கடங்களை உருவாக்குகின்றன என உணர்ந்தால் அது ஒரு நல்ல ஆரம்பம். இயேசுவின் இந்தக்கேள்வி வெறும் கேள்வி அல்ல. ஓர் அழைப்பு. என்னைப் பற்றிப்புரிந்துகொள். என்னைப் பற்றிக்கொள் என்று இயேசு விடுக்கும் அழைப்பு. இது சாதாரண அழைப்பு அல்ல. அவரை நம்பி அவரோடு நடக்க அவரைப்போல் நடக்க இரவானாலும் புயலானாலும் துணிந்து நடக்க அவர் தரும் ஓர் அழைப்பு. வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் இந்தஅழைப்பிற்குமனதின் ஆழத்திலிருந்து வரட்டும் நம் பதில்கள்.




இயேசுவை அறிந்து கொள்ளும் இரு வழிகளை இன்றைய நற்செய்தி நமக்கு வழங்குகிறது. சொந்த ஈடுபாடு எதுவும் இல்லாமல் இயேசுவைப் பற்றிய கருத்துக்களைத் திரட்டுவது முதல் வழி.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்? என்று இயேசு கேட்ட போது இந்த முதல் வழியில் திரட்டிய பதில்களைச் சீடர்கள் இயேசுவிடம் கூறினர். பின்னர் இயேசு தன் சீடர்களிடம் ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்? என்று கேட்டார். சீமோன் பேதுரு நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்கின்றார். பேதுருவின் பதில் வெறும் கருத்துக்களைத் தாண்டி விசுவாசத்தின் அறிக்கையாக இங்கு ஒலிக்கிறது.

இன்று எங்களிடம் இயேசு நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள் என்ற இதே கேள்வியைக் டேக்கிறார் என வைத்துக்கொண்டால் இயேசுவின் கேள்விக்கு தாராள மனதோடும் துணிவோடும் பேதுருவின் விசுவாச அறிக்கைக்குப் பதிலாக நாம் உலகிற்கு இயேசு மெசியா, வாழும் கடவுளின் மகன் என எமது வாழ்வால் காட்டுவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூர் மூத்தவிநாயகர் இளைஞர் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன!

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் நல்லூர் மூத்தவிநாயகர் இளைஞர் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த மேற்படி விளையாட்டுக் கழகத்தினர் விளையாட்டு உபகரணங்களை தந்துதவுமாறு அமைச்சரிடம்கோரிக்கையினை முன்வைத்தனர்.

அதன் பிரகாரம் கழகத்தின் ஊடாக விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் முகமாக ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவற்றை அமைச்சர் முன்னிலையில் ஈ.பி. டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), ஈ.பிடிபியின் யாழ்மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் வழங்கி வைத்தனர்.

# தேசிய மட்ட குண்டுபோடுதலில் யா/ கம்பர்மலை மாணவி முதலிடம்



யா/ கம்பர்மலை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் செல்வி சற்குணராசா சுசன்திகா கரவெட்டிக் கோட்டம், வடமராட்சி வலயம், யாழ். மாவட்டம், வடமாகாண மட்டங்களில் 15 வயது பெண்கள் பிரிவில் குண்டு போடுதல் நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

# மானிப்பாய் இந்துவை வீழ்த்தி யாழ். இந்து அடுத்த சுற்றுக்கு இலகுவாக முன்னேற்றம்

(வேலணை)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 17வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியின் பிரிவு 2 இற்கான இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

இதன் அடிப்படையில் 33.3 பந்துமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். துடுப்பாட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி சார்பில் குகபிரசாத் 35 ஓட்டங்களையும் பிரதீபன், திலக்ஸன் ஆகியோர் தலா 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யாழ். இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீச்சில் மதுசன் 3 இலக்குகளையும்,சிந்துஜன் 2 இலக்குகளையும், வைகரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


மதுசன்

126 ஓட்டங்களைவெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி அணி 9.2 ஓவர்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் மதுசன் 2 ஆறுகள் 15 நான்குகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களையும் சஜீகன் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பில் பந்துவீச்சில் பிரதீபன் 2 இலக்குகளை கைப்பற்றினார். நடைபெற்று முடிந்த இரண்டாம் சுற்றின் இரண்டு போட்டிகளிலும் யாழ். இந்து அணி வெற்றி பெற்றதன் மூலம் அடுத்த சுற்றுக்குள் இலகுவாக முன்னேறியுள்ளது.

# ஹாட்லிக் கல்லூரியை வீழ்த்தியது யாழ். இந்து

(வேலணை)

மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது. இப் போட்டியில் நாணயற் சுழற்சியில் வென்ற இந்துக் கல்லூரியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானி த்தனர்.

மதுசனின் அதிரடியான 60 ஓட்டங்கள் மூலம் 200 ஓடங்களைப் பெற்றுக் கொண்டது. இந்துக் கல்லூரி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் சஜீகன் 48 ஓட்டங்களையும் நிலோஜன் 30 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஹாட்லிக் கல்லூரி சார்பாக அருள்ராஜ் 43 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் நிரோஷன் 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

201 என்னும் வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 146 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

ஹாட்லிக் கல்லூரி சார்பாக துடுப்பாட்டத்தில் சுஜீவன் 33 ஓட்டங்களையும் ஆனந்தசஜன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இந்துக் கல்லூரி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பிரகாசித்த மதுஷன் பந்து வீச்சிலும் 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை கைப்பற்றி அசத்தினார். சிந்துஜன் 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினார். இதன் மூலம் இப்போட்டியில் இந்துக் கல்லூரி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹாட்லிக் கல்லூரியைத் தோற்கடித்தது.

# வவுனியா பிறீமியர்லீக் கிரிக்கெட் போட்டி ப்ரண்ட்ஸ், றெக்ரேஷன் அணிகள் வெற்றி

vpl
Vavuniya
Premier League

(வேலணை)

வவுனியாவில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் வவுனியா பிறீமியர் லீக் போட்டிகளில் கடந்த வார இறுதிக்கான போட்டிகளில் ப்ரண்ட்ஸ் விளையாட்டுக்கழகம், றெக்ரேஷன் விளையாட்டுக்கழகம், யுனிபைட் விளையாட்டுக்கழகம், செவ்வானம் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் வெற்றி பெற்றுள்ளன. ப்ரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் நியூ பைட் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ப்ரண்ட்ஸ் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப்பெற்றது.

ப்ரண்ட்ஸ் கழகம் சார்பாக பாஸ்கர் 17 பந்துகளில் 28 ஓட்டங்களையும் ராம் 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்று அதேவேளை, பந்து வீச்சில் நியூ பைட் விளையாட்டுக் கழகம் சார்பாக கார்த்திக் 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலளித்தாடிய நியூ பைட் விளையாட்டுக்கழகம் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

அக்கழகம் சார்பாக றமணன் 21 பந்துகளில் 20 ஓட்டங்களையும் லிகன் 12 பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ப்ரண்ட்ஸ் கழகம் சார்பாக சதீஸ் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கைக் கைப்பற்றிய அதேவேளை போட்டியின் நாயகனாகவும் தெரிவானார். றெக்ரேஷன் விளையாட்டுக்கழகத்திற்கும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற 18 ஓவர்க [illegible] போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய றெக்ரேஷன் விளையாட்டுக்கழகம் 18 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் றெக்ரேஷன் கழகம் சார்பாக திலீபன் 35 பந்துகளில் 29 ஓட்டங்களையும் ராஜன் 16 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சார்பாக டிநா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

106 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 18 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் மட்டுமே பெற்று தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் ஜெசி 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும் மனோஜ் 13 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் றெக்ரேஷன் கழகம் சார்பாக டிலுக்சன் 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சக்தி 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய றெக்ரேஷன் விளையாட்டுக் கழகத்தின் டிலுக்சன் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சியின் 3 விருது சங்கக்காரவுக்கு



ஐ.சி.சி விருது வழங்கல் விழாவில் குமார் சங்கக்கார, வருடத்தின் சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் மற்றும் மக்களின் தெரிவு விருது உட்பட 3 விருதுகளை வென்றுள்ளார்.

# சிக்கித் தவிக்கிறது மு.கா...

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்களே அதிகமாக இருப்பதாக கட்சி உயர் பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் ஆளுங்கட்சியில் இருந்து விலகியதாலேயே முஸ்லிம் காங்கிரஸுக்கு மக்கள் அதிக வாக்குகளை நம்பி அளித்துள்ளனர். எனவே அம் மக்களை ஏமாற்றி அரசுடன் இணைய கட்சி முனையக் கூடாது என்றும் கட்சிக் குள் எதிர்க் கருத்துக்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதற்கு அரசாங்கமும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் காங்கிஸுக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கும் பட்சத்தில் அதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ள ஹாபீஸ் நசீர் அகமட்டுக்கு வழங்குவதற்கான சமிக்ஞைகளை ரவூப் ஹக்கீம் வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும்;

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரையே முதலமைச்சராக நியமிக்க வேண்டுமென்றும் ரவூப் ஹக்கீமிடம் வலியுறுத்திக் கொண்டிருப் பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்கையில் இன்று நடைபெறவுள்ள முஸ்லிம் காங்கிஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் நினைவுப் பொதுக் கூட்டத்தில், கிழக்கில் ஆதரவு யாருக்கு என்பதை அறிவிக்க முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எண்ணியிருந்ததாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8)

# இலங்கைத் தமிழர்...

அரசு நான்கு வேறுபட்ட விடயங்களை ஒன்றிணைத்து உலகிற்கு ஒரு விடயமாக காண்பிக்க முனைவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதாவது, இலங்கை மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள், மனிதவுரிமை மீறல்கள், கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை வழங்கத் தவறியமை, யூ.பி.ஆர். எனப்படும் ஐ.நா. ஆய்வு முறை ஆகிய நான்கு விடயங்களை ஒன்றிணைத்து, இலங்கை மீதான சர்வதேச பொறிமுறைகளிலிருந்து தாம் தப்பித்துக் கொள்ளும் நோக்குடன், இவற்றை ஓர் சிறிய விடயமாக உலகிற்கு காண்பிக்க இலங்கை அரசு முனைகிறது.

இலங்கையின் எந்த சிங்கள ஆட்சியாளரும் இனப்பிரச்சினைக்கு ஒருபொழுதும் அரசியல் தீர்வு காணப் போவதில்லையெனவும் தமிழர் மனிதவுரிமை மையத்தின் மனுவில் கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளும், பௌத்த மத பிரசாரங்களும் அதிகரித்து வருவதுடன், இராணுவ அடக்குமுறைகளுடனான சிங்கள குடியேற்றங்களும் இடம்பெறுவதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 21ஆவது கூட்டத் தொடரின் பங்காளர்களுக்கு தமிழர் மனிதவுரிமை மையத்தின் பொதுச் செயலாளர் கிருபாகரனின் தலைமையில் இவ்வறிக்கை விநியோகிக்கப்படுகிறது.

அறிக்கையில் மேலும் 2005-ம் ஆண்டு முதல் இலங்கையின் ஜனாதிபதி யான மகிந்த ராஜபக்ஷ, இலங்கைத்தீவில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை சம்பந்தமாக, சர்வதேச சமுதாயத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஐ.நா. மனிதவுரிமைப் பிரிவினால் வெளியிடப்பட்ட இலங்கையின் மனிதவுரிமைப் பற்றிய மிக அண்மைக்கால அறிக் கைகளும் தமிழர் மனிதவுரிமை மையத்தினரின் (TCHR) அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-11)

# போனஸ் ஆசனத்தில்...

மூலம் கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கிழக்கு மாகாண சபைக்கான போனஸ் ஆசனங்களின் மூலம் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால், தமிழர்களின் பிரதிநிதித்துவம் 13 ஆகவும், சிங்களவர்களின் பிரதிநிதித்துவம் 9 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதன்படி, கிழக்குமாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களுக்கு போனஸ் ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து துரையப்பா நவரட்ணராஜாவும், அம்பாறை மாவட்டத்திலிருந்து ரி.எம்.ஜெயசேனவும் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்க ஆதரவு தரவேண்டுமானால், அந்தக் கட்சி பெற்றுக்கொண்ட 2 போனஸ் ஆசனங்களில் ஒன்றை தமக்குத் தர வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண சபை மொத்த பிரதிநிதித்துவத்தையும் பார்கையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் 15ஆகவும் தமிழர்களின் பிரதி நிதித்துவம் 13ஆகவும், சிங்களவர்களின் பிரதி நிதித்துவம் 9 ஆகவும் தற்போது முடிவாகியுள்ளது. (ந-1)

# ஐ.நா. அதிகாரிகள் மூவர்...

இவ் விஜயத்தின்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மற்றும் யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரைச் சந்தித்து யாழ்.மாவட்ட நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்ட பின்னர் யுத்தத்திற்குப் பின்னரான மீள்குடியேற்ற நிலைமைகளையும் பார்வையிடுவதற்காகவும் அப்பகுதி மக்களைச் சந்தித்து கலந்துரையாடுவற்குமாக அரியாலை மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களுக்கும் சென்று நிலைமைகளை நேரடியாக அவதானிக்கவுள்ளனர்.

மேலும் இவர்கள் யாழ்.மனித உரிமை செயற்பாட்டாளர்களை சந்தித்து யாழ்.மாவட்டத்தில் தற்போதைய நிலைவரங்கள்தொடர்பாகவும் யுத்தத்திற்குப் பின்னரான மனிதவுரிமை நிலைவரங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணியளவில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை யாழ்.ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன். யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவையும் சந்திக்கவுள்ளனர்.

அடுத்து மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து இறுதி யுத்தப் பாதிப்புக்களையும் மீள்குடியமர்ந்த மக்களையும் பார்வையிட்டு நிலைமைகளையும் கேட்டறிந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளான ஹன்னி மெகாலி மற்றும் ஒஸ்கார் சொலேரா ஆகிய இருவரும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளை நேற்று முன்தினம் காலை சந்தித்தனர்.

இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைவரம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அமுலாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு அவர்கள் வந்துள்ளதாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம கூறினார். (ந-6,11)

# ஐ.நா.அதிகாரிகள்...

மத்திய கிழக்கு மற்றும் வட அமெரிக்கப் பிரதிநிதி ஹானி மெகாலி மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவின் சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம் தொடர்பான பிரதிநிதி ஒஸ்கார் சோலர்ஸ் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

போர் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

போர் வலய மக்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்கு தேவையான பெரும்பாலான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றும், ஏனைய மாகாண மக்களைப் போன்றே வடக்கு-கிழக்கு மக்களும் உட்கட்டமைப்பு வசதிகளை அனுபவிக்கின்றனர் எனவும் அமைச்சர் விளக்கியுள்ளார்.

பாலம் அமைத்தல், வீதிகள் அமைத்தல், பெருந்தெருக்கள் அமைத்தல், கல்வி வசதிகளை ஏற்படுத்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# கிழக்கில் தேசிய அரசா...

டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை இல்லை. இந்த நிலையில் தேசிய சுதந்திர முன்னணியின் ஒரு ஆசனத்துடன் 15 ஆசனங்களைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியை அமைக்கப் போவதாக கூறுகிறது.

எம்மைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படுமானால் அதனை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்.

வெறுமனே அமைச்சர்களான ஹெகலிய ரம்புக்வெல, சுசில் பிரேமஜயந்த போன்றோர் அதனை கூறுவதில் எந்த அர்த்தமுமில்லை. தேசிய அரசாங்கம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அக்கறையிருப்பதாக சம்பந்தன் இதன்போது குறிப்பிட்டார்.

தேர்தல் நடப்பதற்கு முன்னரே தாம் கிழக்கின் ஆட்சியில் முஸ்லிம் முதலமைச்சர் என்ற நிலைப்பாட்டை வெளியிட்டமையை சம்பந்தன் சுட்டிக்காட்டினார். எனவே அதில் புதிதாக கூறுவதற்கு ஒன்றுமில்லை.

இந்த நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் முடிபுகளை எடுக்காமல் இருப்பது ஜனநாயகத்தை மதிக்கும் முஸ்லிம்களுக்கு செய்யும் துரோகமாகும். எனினும் காலம் தாமதித்தேனும் முஸ்லிம் காங்கிரஸ் சரியான முடிபை எடுக்குமென்று தாம் நம்புவதாக சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சந்திப்பதாக கூறி, இறுதி நேரத்தில் அநாகரிகமான முறையில் சந்திப்பை தவிர்த்துக் கொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் சுரேஸ் எம்.பி. தெரிவிக்கையில்,

இச்சந்திப்புக்கு இரு கட்சியினருக்கும் ஏற்கெனவே அறிவித்து அனுமதியும் பெற்றிருந்தோம். இந் நிலையில் நேற்றிரவு எமது கட்சித் தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்காக நீண்ட நேரம் காத்திருந்தோம்.

ஆனால் அவர்கள் குறித்த நேரத்திற்கு வருகை தரவில்லை. எமது கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் - ரவூப் ஹக்கீமுக்கு பல முறை தொடர்பை ஏற்படுத்திய போதும் பதில் இல்லை.

எங்களுடனான சந்திப்பை அநாகரிகமான முறையில் முஸ்லிம் காங்கிரஸ் தவித்திருக்கிறது. நாகரிகமான முறையில் சந்திப்பை தவிர்த்திருக்கலாம். ஆனால் எங்களை காத்திருக்க வைத்து அநாகரிகமான முறையில் முஸ்லிம் காங்கிரஸ் நடந்து கொண்டமை வருத்தமளிக்கிறது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறினார். - (ந-11)


## உடனடி வேலைவாய்ப்பு
## (Management Trainee 2012-2013)

ஆசியாவில் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான 'THE GRANTON GROUP' நிறுவனத்தின் முழுமையான பக்க பலத்துடன் இயங்கும் இலங்கையின் வட மாகாண கிளைகளுக்கு (யாழ்ப்பாணம்/ வவுனியா/ கிளிநொச்சி) முகாமைத்துவ பயிற்சிக்கு O/L, A/L சித்தியடைந்த 18 -30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் தொடர்பு கொள்ளவும்.

- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் மாதாந்தம் 50000/- மேல் பெறலாம்.
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- பயிற்சிக் காலம்: 3 - 6 மாதங்கள்.
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.

(C-1070)

Contact: 0777274795, 0244907449 -மது

## RK CERAMIC

122, பிரதான வீதி, நெல்லியடி.

TEL: 0776660699, 021 320 7525

கண்கவர் டிசைன்களில் 'எங்கள் தேர்வு, உங்கள் தெரிவு' இதோ!

- நில மாபிள்கள்
- சுவர் மாபிள்கள்
- கொமேட் செற்
- குளியலறை சாதனங்கள்
- கண்ணாடி செற் வகைகள்
- சில்வர் சிங் வகைகள்
- கால் மிதிகள்
- PVC பைப் வகைகள்
- பிற்றிங்ஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் கதவுகள்
- பெயின்ற் வகைகள்
- கலரிங் வகைகள்
- நீர்த்தாங்கிகள்
- மோட்டார் வகைகள்

இன்னும் பல வீட்டு உபயோகபொருட்களைதரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்வதுடன்

ஒப்பந்த அடிப்படையில்...

- மாபிள் பதித்தல்
- பிளம்பிங் வேலைகள்
- பெயின்ற் பூசுதல்

போன்ற வேலைகளும் செய்து தருவதுடன்

- இலவச விநியோகம்

குறிப்பு RKCERAMIC 122,பிரதானவீதியில், நெல்லியடியில் மட்டுமே உள்ளது. (நெல்லியடியில் வேறு கிளைகள் கிடையாது)

(435)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பட்டுப்புடவை பணமாகிறது!
## ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்
# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம் T.C.T வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

தொ.பே:-0752145355

8 தினங்கள் மட்டுமே!

**16.09.2012 முதல் 23.09.2012 வரை**



பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள், பழைய கிழிந்த கூறைப் புடவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/- க்கு மேல் ரூபா 20000/- வரை வழங்கப்படும்

பழைய காலத்து கல்வைத்த நகைகள், லால்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

குறிப்பு :- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து பட்டுப் புடவை கொடுத்தால் வெள்ளிக் கொலுசு (30Tch) ஒன்று இலவசம்

வேலை நேரம் காலை 9.30 மணிமுதல் இரவு 6.30 மணிவரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.



## ஆங்கிலம் / கணிதம்
### பிரத்தியேக வகுப்புக்கள்

- English & Tamil Medium
- தரம் 6 - O/L வரை
- இவ்வருட O/L மாணவர்களுக்கு கடந்த 10 வருட Past Paper உடன் ஏராளமான மாதிரி வினாக்களும் செய்து விடப்படும்.

வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

0750715058 | பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்



நல்லூரில் Mobile Phone திருத்தும் பாடநெறி By K.Ganesh
(சி-1068) 0777444225



ஆங்கில ஆசிரியர் தேவை. மேலதிக விபரங்களுக்கு
(சி-1068) 0777444407



## Pearl Technology (Pvt) Ltd.
Pearl Technologies
# 118, 4th Cross Street, Jaffna, Srilanka

**முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் செலுத்துனர்களுக்கு !**



முச்சக்கரவண்டிகளுக்கான மீற்றர்களைப் பொருத்தும் முன்னோடி நிறுவனமாகிய நாம் யாழ் மண்ணில் முதன்முதலாக எமது சேவையினை யாழ்மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறோம்

எமது Win Digital Auto Fare Meter ஆனது

விலை 9500/= மட்டும்

* குறைந்த விலை.
* தவணைமுறைக் கொடுப்பனவு வசதி.
* ஒப்பீட்டு அளவில் மற்றைய Meter களைவிட கூடுதல் வசதிகள்.
* உயர் தொழில்நுட்பம்.
* முற்று முழுதாக இலங்கையில் தயாரானது.
* ஒரு வருடகால உத்தரவாதம்.
* விற்பனைக்குப்பிந்திய சேவை.




உங்கள் முன்பதிவுகளை இன்று முதல் எமது அலுவலகத்தில் அல்லது யாழ்மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் . இதன் மூலம் சிரமங்களையும் வீண் நேரதாமதத்தினையும் தவிர்க்கலாம் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
மேலதிக விபரங்களுக்கு :-

**Pearl Technology (Pvt) Ltd**
இல: 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் .
தொ-இல :- 021 221 9898

அல்லது யாழ்மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினை நாடவும்...
(424)



பிரெஞ்சு மொழிக் கற்கைக்கு
யாழில் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு உத்தியோகபூர்வ FRENCH நிறுவனம்

af
## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
Learn French The French Way

- France இன் Paris நகரில் உள்ள தலைமை நிறுவனமாகிய "Alliance Française de Paris" ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கிகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு உத்தியோகபூர்வ பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.
- உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises உள்ளன. இலங்கையில் KOTTE, KANDY, JAFFNA, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன (French Embassy website: *www.ambafrance-lk.org*).
- சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.

- ஒவ்வொருவரிடமும் Listening, speaking, reading & writing ஆகிய திறமைகள் சோதிக்கப்படுகின்றன.
- 6 மாத கற்கைநெறியின் (BASICS 100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தரமான CERTIFICATE வழங்கப்படுகிறது. 6 மாதத்தினை பூர்த்திசெய்ய முடியாவிட்டால் கடிதம் ஒன்றை பெற்றுக்கொள்ளலாம்.
- அதன் பின்னர் சர்வதேச ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட ஐரோப்பிய பரீட்சைகளான DELF, DALF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளை பெற முடியும்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
வடமாகாணத்தில் தனியொரு முகவரி:
61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093/நேரில் வரலாம்
E-mail: alliancejaffna@yahoo.com
(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)
(406)



IDM Chankanai Campus
## IDM சங்கானையின் Challenger Trophy 2012
## இணையத்தள வடிவமைப்பு
திறந்த போட்டி

முதலாம் பரிசு Rs:15000/= + Challenger Trophy
2ம் பரிசு Rs.10000/=
3ம் பரிசு Rs.5000/=
Valuable Scholarships

பங்குபெற பரிசில் பெற நீங்கள் செய்யவேண்டியது பின்வரும் கூப்பனை நிரப்பி கத்தரித்து IDM Chankanai Campus -Luxmy Plaza Main Street Chankanai எனும் முகவரிக்கு 25-09-2012 க்கு முன்பதாக அனுப்பிவைக்கவும்

ஆர்வமுள்ள எவரும் பங்குபெறலாம்
முழுப்பெயர்: ..............................
முகவரி : ..............................
தொ.பே இல: ..............................
(சி-1055)



**சிகரம்** நூல் வெளியீடு & கல்வி வழிகாட்டி கருத்தரங்கு மற்றும்
கல்வி - தொழில் வழிகாட்டி



விசா கெடுபிடி IELTS வங்கிப்பணம் சிக்கல்கள் எதுவுமின்றி
UK Australia New Zealand Canada America Malaysia
பட்டக்கல்விகளை வழங்கும் 7 பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும்

INTI International University | SUNWAY University | The University of Nottingham | SEGi University College | Manipal | MAHSA University College

# கல்விக் கண்காட்சி
Certificate - Diploma - Foundation - Bachelors - Masters - PhD Programs

செப்டெம்பர் 18, 19ம் திகதிகளில் காலை 9 - மாலை 5 மணி
@ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்

பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க வாருங்கள்

2012 ஒகஸ்ட்டில் 15 மாணவர்கள் பயணமாகியுள்ளனர் நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள்!

70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி

Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia

EDUCATION
சிகரம் கல்வி வழிகாட்டி சேவை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 300 80 60 நேரடி 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.